பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 6 சனிக்கிழமை (19-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:55

# நிரந்தர யுத்தநிறுத்தமும் பேச்சும் தாமதமாகும் என்கிறார் பிரதமர்

## மோதல் தவிர்ப்பு நீடிக்கப்படும் மனிதாபிமான பணி தொடருமாம்

கொழும்பு,ஜனவரி19

**நிரந்தர யுத்தநிறுத்தம் ஏற்படுவதும் முறையான சமாதானப் பேச்சுகள் நடப்பதும் தாமதமாகும். ஆனால் எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் முடியும் மோதல் தவிர்ப்பு நீடிக்கப்படும்; மனிதாபிமானப் பணிகள் தொடர்ந்து துரித கதியில் மேற்கொள்ளப்படும்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

கொழும்பில் உள்ள பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்று அலரி மாளிகையில் சந்தித்து உரையாடிய போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

மூன்று பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளன.

ஒன்று - போரை முடிவுக்குக் கொண்டு வந்து, புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவது.

இரண்டு - ஜனநாயக நடைமுறைகளைப் பேணிப் பாதுகாத்துப் பலப்படுத்துவது.

மூன்று - நலிந்து போயிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டி எழுப்புவது.

இந்த முக்கிய மூன்று பணிகளுக்கும் மக்களின் முழு ஒத்துழைப்பும் கிடைக்கும் என நம்புகிறேன்.

மக்களின் அவலங்கள் தீரவேண்டும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். நாட்டின் பொருளாதார நலிவு நீங்கவேண்டும் எல்லாவற்றிற்கும் மேலாகப் புலிகளினால் அரச படையினரை விரட்ட முடியவில்லை. படையினரால் புலிகளை அழிக்கமுடியவில்லை. 20 வருட அனுபவத்தில் கண்ட உண்மை இது.

எனவே யுத்தத்தை விட்டுவிட்டு, கூடிப் பேசி பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். சர்வதேச சமூகமும் அதைத்தான் சொல்கிறது.

நாட்டின் இறைமைக்கும், பிரதேச ஒருமைப்பாட்டுக்கும் பங்கம் ஏற்படாத வகையில் தீர்வுகாண வேண்டும் என்று வற்புறுத்துகிறது சர்வதேச சமூகம்.

சர்வதேச சமூகத்தின் ஆதரவை நாம் இழக்க முடியாது.

யுத்தத்தின் மூலம் பிழைப்பு நடத்தும் உயர் அதிகாரிகள் சிலரும் ஆயுத தரகர்களும்தான் யுத்தநிறுத்தத்தை எதிர்ப்பார்கள். அதை நாம் பொருட்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் இதுவரை அரசிடம் எதுவுமே கேட்கவில்லை!

### பிரதமர் வெளியிட்ட தகவல்

கொழும்பு,ஜன.19

"விடுதலைப் புலிகளுடன் பேச்சு ஆரம்பமானதும் முக்கியமாக எதைப் பற்றிப் பேசுவீர்கள்? அவர்கள் என்ன கேட்கிறார்கள்?"

- இத்தகைய கேள்விகளை பத்திரிகை ஆசிரியர்கள் நேற்று பிரதமர் ரணிலைச் சந்தித்தபோது அவரிடம் கேட்டனர்.

பிரதமர் ஒரே வரியில் பதில் கூறினார்.

"புலிகள் இதுவரை எங்களிடம் எதுவும் கேட்கவில்லை; நாம் அவர்களிடம் விசாரிக்கவும் இல்லை"- என்றார் பிரதமர்.

இந்தச் சந்திப்பின்போது அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மலிந்த மொறகொட, பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோரும் உடனிருந்தனர். (உ)

## யாழ்நகரில் மட்டும் ஹர்த்தால் ஏனைய இடங்களில் வழமைநிலை

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் மற்றும் கள்ளச் சந்தை வியாபாரம் ஆகியவற்றைக் கண்டித்து புளொட் அமைப்பு ஏற்பாடு செய்த ஹர்த்தால் காரணமாக யாழ்.நகரப் பகுதி வெறிச்சோடியது. ஆனால் குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் வழமைநிலை காணப்பட்டது.

யாழ்நகரப் பகுதியில் உள்ள பெரும்பாலான வர்த்தக நிலையங்கள் மூடிக்கிடந்தன. காலையில் பஸ், மினிபஸ் சேவைகள் வற்புறுத்தல் காரணமாக நிறுத்தப்பட்டன. மாலை வரை அச்சேவைகள் இடம்பெறவில்லை. இதனால் நகரப்பகுதியில் மக்கள் நடமாட்டம் குறைந்திருந்தது.

மாணவர்கள் வரவின்மையால் பாடசாலைகள் இயங்கவில்லை. வங்கிகளில் ஓரளவு பணக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

எனினும் யாழ்நகரப் பகுதி தவிர்ந்த குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் ஹர்த்தால் வெற்றியளிக்கவேயில்லை. வர்த்தக நிலையங்கள் திறந்திருந்தன. மக்கள் நடமாட்டமும் காணப்பட்டது. பாடசாலைகள் இயங்கிய போதிலும் மாணவர்கள் வரவு குறைந்து காணப்பட்டது. அரச அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள் வழமைபோல் இயங்கின.

வடமராட்சியில் இருந்து நேற்றுக் காலை யாழ்நகர் நோக்கிவந்த வ.பி.போ.சபைக்குச் சொந்தமான பஸ்கள் இருபாலைப் பகுதியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன. இதனால் அதில் பயணம் செய்த அரச ஊழியர்கள், பொதுமக்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் யாழ்நகர் வந்தடைந்தனர்.

யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக வந்த நோயாளர்களின் எண்ணிக்கை வழமையைவிட குறைந்தே காணப்பட்டது.

இதேவேளை -

யாழ்.செயலகத்திற்கு முன்னால் நடத்தப்பட்ட சத்தியாக்கிரகப் போராட்டத்தில் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி), புதிய ஜனநாயகக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றத்தைக் கண்டிக்கும் வகையிலான பதாகைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கியிருந்தனர்.

போராட்டத்தின் இறுதியில் யாழ். அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

(உ-7-8-10-15-51-86-100-117-173-180)

## புலிகள் மீதான தடையை நீக்கக்கோரி மட்டுநகரில் நேற்று மறியற் போர்

யாழ்ப்பாணம்,ஜன.19

மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் ஏற்பாட்டில் நேற்று மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் ஒரு மணி நேர மறியற்போராட்டம் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட மற்றும் சில கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்பட்ட இந்த மறியற் போராட்டத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கூட்டமைப்பு பிரமுகர்கள், கல்வியியற்கலலூரி மாணவர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கான பொது மக்களும் கலந்துகொண்டனர் (க-4)

## பொலீஸ் விசாரணை எதற்கும் டக்ளஸ் உள்ளாகவில்லை

### ஈ.பி.டி.பி. மறுப்பு அறிக்கை

கொழும்பு,ஜன.19

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா பொலீஸ் விசாரணை எதற்கும் உள்ளாகவில்லை என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

டக்ளஸ் தேவானந்தாவை பொலீஸ் விசாரணை செய்வதாக வெளியான செய்தி குறித்து அக்கட்சி விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

டக்ளஸ் தேவானந்தா பொலீஸ் விசாரணைகளுக்கு உள்ளானதாக சித்திரிக்கும் விதத்தில் வெளியான செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை ஆகும். பத்திரிகையாளர் நிமலராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பான விசாரணைகளில் எமது கட்சியை வேண்டும் என்றே தொடர்புபடுத்தும்வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்மூடித்தனமான கற்பனைகளுக்கு இந்த வதந்தி ஓர் உதாரணமாகும்.

பொலீஸார் இச்சம்பவம் தொடர்பாக மேற்கொண்டுவரும் சுயாதீன விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு நல்கி வரும் எமது கட்சிமீது அபாண்டமாகப் பழிசுமத்தும்வகையில் திட்டமிட்டு அவதூறு பரப்பப்பட்டு வருகிறது

(14ஆம் பக்கம் பார்க்க)

### 5ஆவது சேவை 'அவுட்'?

இரத்மலானை - பலாலி மார்க்கத்தில் தினசரி ஐந்தாவது சேவையாக - இந்து கலாசார அமைச்சினால் நடத்தப்பட்டு வரும் - விமானப் பயண சேவை நேற்று நடைபெறவில்லை. இன்றும் அச்சேவை நடைபெறாது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நாளை மறுதினம் முதல் அச்சேவை மீண்டும் நடைபெறும் எனக் கூறப்பட்டது. ஆனால் அதை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை.

இந்தச் சேவை நடைபெறாததற்கான தெளிவான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. (உ)

## ஹர்த்தால் வெற்றியளிக்காததற்கு 'உதயன்' பத்திரிகையே காரணமாம்!

### கண்டிக்கின்றது புளொட் அமைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.19

"எமது ஹர்த்தால் அழைப்பு - போராட்டம் - பெரிதும் வெற்றியளிக்கவில்லை. அதற்குக் காரணம் 'உதயன்' பத்திரிகையே!"

- இப்படிக் குற்றம் சுமத்தினார் புளொட் உறுப்பினரான செ.இருதயராஜன்.

விலை உயர்வைக் கண்டித்து புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று யாழ். செயலகத்திற்கு முன்னால் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தின் முடிவில் உரையாற்றியபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

எமது ஹர்த்தால் போராட்டத்தை 'உதயன்' பத்திரிகை முதன்மைப்படுத்தாததால்தான் அது வெற்றியளிக்கவில்லை.

எமது இந்தப் போராட்டத்தை விட உதயன் பத்திரிகைக்கு பாதை திறப்புதான் முக்கியமானது போலும்.

'உண்மை - வஞ்சாமை - நடுநிலைமை' என்ற அதன் மகுடவாக்கியங்கள் அப்பத்திரிகைக்குச் சற்றேனும் பொருத்தமானதல்ல.

பத்திரிகையென்றால் பக்கம் சாராது நடுநிலையுடன் செயற்பட வேண்டும். எனவே உதயன் பத்திரிகை கடுமையாகக் கண்டிக்கப்பட வேண்டியது. - என்றார். (உ)

## கடைகளை மூடுமாறு வற்புறுத்திய எண்மர் கைதாகிப் பின் விடுவிப்பு

யாழ்நகரப் பகுதியில் நேற்று வர்த்தக நிலையங்களை மூடுமாறு வற்புறுத்திய புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) உறுப்பினர்கள் 8பேர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்றன் பொன்னையா, யாழ். மாநகரசபை உறுப்பினரான மு.தவநாதன் மற்றும் கு.சுதாகரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச் சேர்ந்த எஸ்.ராஜன், எஸ்.ஈஸ்வரன், த.சுமன், எஸ்.சுதன், எம்.மனோரஞ்சன் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் கைதுசெய்யப்பட்ட இவர்கள் யாழ்.பொலீஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டு விசாரணைகளின் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை -

நல்லூர், திருநெல்வேலி பகுதிகளில் வர்த்தக நிலையங்களை மூடுமாறு கோரிய புளொட் உறுப்பினர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் நிலவியதையும் காணமுடிந்தது.(உ-7-8-

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சமாதான முயற்சிகளுக்கு இறையாசீர் வேண்டி கோப்பாயில் இருந்து இன்று சைக்கிள் பேரணி

யாழ்ப்பாணம்,ஜன.19

நாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்தும், முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு இறையாசீர் வேண்டியும் -

கோப்பாய், திருநெல்வேலி பகுதி றோமன் கத்தோலிக்க மக்கள் சைக்கிள்களில் சமாதானப் பேரணி ஒன்றை - இன்று மாலை 4 மணிக்கு கோப்பாய் மரியன்னை ஆலயத்தில் இருந்து கோண்டாவில் புனித செபஸ்தியார் ஆலயம் வரை நடத்தவுள்ளனர்.

கோப்பாய் - திருநெல்வேலிப் பகுதி ஆலய பங்குத் தந்தை அ.செலஸ்ரீன் (அ.ம.தி.) அடிகளாரின் தலைமையில் ஆரம்பமாகும் இந்தச் சமாதானப் பேரணி, சமாதானத்தை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் -

கோப்பாய் மரியன்னை ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி பருத்தித்துறை வீதி ஊடாக கோப்பாய் சந்தி உரும்பிராய் வீதி - உரும்பிராய் சந்தி - பலாலி வீதி - ஊடாக கோண்டாவில் புனித செபஸ்தியார் ஆலயம் வரை சென்றடையும்.

நாட்டின் சமாதானத்துக்காக கோண்டாவில் செபஸ்தியார் ஆலயத்தில் விசேட வழிபாடுகளுடன் நற கருணை ஆராதனையும் இடம்பெற வுள்ளது.

இந்தச் சமாதானப் பேரணியில் கோப்பாய் வடக்கு புனித சூசையப்பர் ஆலய பங்கு மக்களும், திருநெல்வேலி புனித சவேரியார் ஆலய பங்கு மக்களும், கோப்பாய் தெற்கு மரியன்னை ஆலய பங்கு மக்களும் கலந்துகொள்வர். (க-6-9)

# புதிய கிரிக்கெட் விதிகள் பற்றிய வீடியோ படக்காட்சி நாளை

யாழ்ப்பாணம்,ஜன.19

லண்டன் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் 'கிரிக்கெட் சட்டத்தின் புதிய விதிகள்' தொடர்பான வீடியோ படத் தொகுப்பு ஒன்றை வெளியிட்டிருக்கின்றது.

இந்த வீடியோப் பிரதியை யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் யாழ்ப்பாணத்தில் வெளியிட உள்ளது.

இந்த வீடியோ பிரதியின் அறிமுக நிகழ்வும் படக்காட்சியும் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

அகலத் திரையில் வீடியோ படம் காண்பிக்கப்படும். கிரிக்கெட் மத்தியஸ்தர்கள், கிரிக்கெட் துறை ஆசிரியர்கள், பயிற்றுநர்கள், வீரர்கள் மற்றும் கிரிக்கெட் ஆர்வலர்கள் அனைவரும் இந்தப் படத்தைப் பார்வையிட்டுப் பயனடையுமாறு யாழ்.கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தின் செயலாளர் எஸ். சிறீகாந்தன் அறிவித்திருக்கிறார்.

## தனியாருக்கு மண்எண்ணெய்:

# அறிவுறுத்தல் கிடைக்குமுன்பே இடம்பெற்ற விநியோகமாம்

யாழ்ப்பாணம்,ஜன.19

"தனியாருக்கு வழங்கப்பட்ட மண்எண்ணெயை மீளப்பெறுமாறு நீதிமன்றம் நேற்று உத்தரவு" என்ற தலைப்பில் நேற்றைய உதயனில் வெளியான செய்திகுறித்து இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடக்குப் பிராந்திய முகாமையாளர் அ.அந்தோனிப்பிள்ளை மேலதிக விளக்கம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

மண்எண்ணெய் சுமுக நிலைக்கு வரும்வரை அரச அதிபரின் அறிவுறுத்தலின்படியே மண்எண்ணெய் விநியோகம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற எனது அறிவுறுத்தல் கிடைக்கு முன்பே, காங்கேசன்துறையில் உள்ள தொகைசாலை அதிகாரியினால் - பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட இரு முகவர்களுக்கு மண்எண்ணெய் வழங்கப்பட்டு விட்டது. இதனை நீதிமன்றில் எடுத்துக் கூறினேன்.

மண்எண்ணெய் விநியோகம் சுமுக நிலைக்கு வரும்வரை யாழ். அரச அதிபரின் கட்டளைப்படியே விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற உத்தரவு சம்பந்தப்பட்ட தொகை சாலை அதிகாரிக்கு தற்போது நீதிமன்றத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.19

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழகம் வருடாவருடம் நடத்தி வரும் விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

- காலை 9 மணி - கே.ஸி.ஸி. எதிர் பற்றீஸியன் வி.க.
- பிற்பகல் 1.30 மணி - ஜொலிஸ்ரார் வி.க எதிர். யாழ். பல்கலைக்கழக வி.க. (க-3)

## சுன்னாகம் லயன்ஸ் செய்தி ஏடு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜன.19

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் மெல்வின் ஜோன்ஸ் நைற் நிகழ்வும் கழகத்தின் உத்தியோகபூர்வ செய்தி ஏடு வெளியீடும் இன்று மாலை 4 மணிக்கு யாழ்.குமாரசுவாமி வீதியில் உள்ள கழகத் தலைவர் லயன் டாக்டர் வை.யோகேஸ்வரனின் இல்லத்தில் நடைபெறும்.

பிராந்திய இணைப்பாளர் லயன் எஸ். பத்மநாதனும் துணைவியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

லயன்ஸ் கழகங்களின் தலைவர்கள், செயலாளர்கள், வலய - பிராந்திய - மாவட்டக் குழுக்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் இந்நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (உ)


**மங்களகரமான புதுக்கடை திறப்புவிழா**

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் தை மாதம் 6ஆம் திகதி (19.01.2002) சனிக்கிழமை பகல் 11.05 தொடக்கம் 11.39 வரையுள்ள (ப.நே) சுபமுகூர்த்தத்தில்

**அம்பிகா எலக்ரிக்கல்**

என்னும் நிறுவனத்தை ஆரம்பித்து நடத்த உள்ளதால் அத்தருனம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து இத் திறப்பு விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

*அம்பிகா எலக்ரிக்கல்,*
*760, K.K.S. வீதி,*
*கட்டாதெரு, யாழ்ப்பாணம்.* (97294)

இங்ஙனம்
உரிமையாளர்.



**மங்களகரமான புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு**

அன்புடையீர்!

இன்று (19-1-2002) சனிக்கிழமை பிபகல் 3.15 மணி முதல் 5.05 மணி வரையில் வரும் சுபமுகூர்த்தத்தில் இல.424, கே.கே.எஸ். வீதியில்

**மெலோடியஸ் மியூசிக்**

என்னும் புதிய கிளை ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடத்த உள்ளோம்.
அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து இவ்விழாவைச்
சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:
திரு.ஐ.சத்தியமூர்த்தி
(உரிமையாளர்)
*மெலோடியஸ் மியூசிக்,*
*303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*

புதிய கிளை:
*இல.424, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(சி20371)


## நல்லை ஆதீனத்தில் நேற்று புதிய கட்டடங்கள் திறப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.19

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட கலாமண்டபமும் ஏனைய கட்டடத் தொகுதிகளும் நேற்று சமயாசார முறைப்படி திறந்து வைக்கப்பட்டன.

கலாமண்டபத்தை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசார்ய சுவாமிகள் நேற்றுக்காலை 9.58 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இதற்கு முன்பாக திருஞான சம்பந்தசுவாமிகளின் உருவச்சிலை நல்லைக் குருமூர்த்த ஆலயத்தில் இருந்து நல்லூர் கந்தசுவாமி கோயில் வீதி வழியாக மங்கள வாத்தியங்களுடன் சிவன் கோயிலுக்கு எடுத்து வரப்பட்டது. பின்பு அங்கு விசேட பூசைகள் நடைபெற்றன. மீண்டும் அங்கிருந்து ஊர்வலமாக புதிய கலா மண்டப வாயிலுக்குக் கொண்டு செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய மண்டபம் திறந்து வைக்கப்பட்டது. ஞானசம்பந்தரின் உருவச் சிலை புதிய மண்டபத்தில் வைக்கப்பட்டது.

இதனையடுத்து ஆதீன முதல்வர் தலைமையில் திறப்புவிழா நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான சிவாச்சாரியார்கள் மற்றும் சமயப் பெரியார்கள், அரசாங்க அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்படப் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஆதீனத்தில் புதிய விருந்தினர் மண்டபத்தை யாழ்.மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கமும், பாலர் பாடசாலைக் கட்டடத்தை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும் நாடா வெட்டித் திறந்து வைத்தனர். அத்துடன் அங்கு நந்திக்கொடியும் ஏற்றிவைக்கப்பட்டது.

புதிய மண்டபத்தில் முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் உருவப்படங்களும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன. (ஐ-10-180)

## நல்லை ஆதீனத்தில் இன்றுமுதல் 10 தினங்களுக்கு 'முத்தமிழ்' நிகழ்வுகள்

நேற்றையதினம் சமய கலாசார முறைப்படி திறந்து வைக்கப்பட்ட நல்லை ஆதீன கலாமண்டபத்தில் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை வரை - தொடர்ந்து பத்து தினங்களுக்கு 'முத்தமிழ்' நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தினமும் பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்ச்சிகள் மாலை 7.30 மணிவரை இடம்பெறும்.

முதல் நாள் நிகழ்ச்சியாக இன்று மங்கல இசை, பண்ணிசைக் கச்சேரி, இசைக் கச்சேரி ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் இன்றைய நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார்.

மாவை ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ.சு.து.சண்முகநாதக் குருக்கள் ஆசியுரை வழங்குவார். (ஐ)

### பாப்பரசரின் பிரதிநிதி இன்று கரவெட்டிக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.19

யாழ்.வருகை தந்துள்ள பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி மேதகு ஜேங் செங் நாண் இன்று மாலை 4 மணிக்கு கரவெட்டி புனித அந்தோனியர் ஆலயத்தில் நடைபெறும் பூசை வழிபாடுகளில் கலந்துகொள்கிறார். தொடர்ந்து கரவெட்டிப் பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் முகாம்களுக்கும் அவர் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் கண்டறிவார்.

**கண்ணீர் அஞ்சலி**

எமது அலுவலகத்தில் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி அகாலமரணமடைந்த எமது சக ஊழியர்

**திருமதி சிவமணி தேவராஜன்** (காசாளர்)

அவர்களுக்கு எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்,
வரையறுக்கப்பட்ட இலங்கைக்காப்புறுதிக்
கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்.
(97289)

**பேரின்ப வாழ்வின் 3ஆம் ஆண்டு நினைவலைகள்**



அமரர்
**சுவாம்பிள்ளை அருளானந்தம்**

மண்ணில் 12-10-1926
விண்ணில் 19-01-1999

*கண்ணின் மணியெனக் கவனமாய்*
*எம்மைக் காத்த அன்புத்*
*தந்தைக்காக இறைவனை வேண்டுகின்றோம்.*

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

*ஆக் லேன்,*
*உடுவில்.* (97299)

**மரண அறிவித்தல்**

**ஆறுமுகம் முருகமூர்த்தி**

(முன்னாள் வெள்ளவத்தை பிரபல வர்த்தகர்)

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் முருகமூர்த்தி நேற்று (18.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பரமலோகமணியின் அன்புக் கணவரும் மகேஸ்வரி, காலஞ்சென்ற கார்த்திகேசு மற்றும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற சிவபாதம், காலஞ்சென்ற வரதராஜா, விசாகப்பெருமாள், உருத்திரமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவஞானரட்ணம், சிவயோகம், நடராஜா, ருக்மணி, அன்னம், விக்னேஸ்வரி, பவானி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2002) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவஞானரட்ணம்
(சிறாப்பர் - மைத்துனர்)

*சுழிபுரம் மேற்கு,*
*சுழிபுரம்.* (C/20378)


**பருத்தித்துறை மறைக்கோட்டக் கரவெட்டிப்பங்கில் இன்று பாப்பரசரின் பிரதிநிதி**

உலகத் திருச்சபையின் ஆன்மீகத் தலைவர் பரி - பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் இலங்கைப் பிரதிநிதி மகாவந்தனைக்குரிய 'ஜேங் செங் நான்' அவர்களின் வருகையில் மறைக்கோட்டக் கத்தோலிக்க மக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம்: புனித அந்தோனியார் ஆலய முன்றில், கரவெட்டி

காலம்: இன்று (19. 01. 2002) சனிக்கிழமை – பிற்பகல் 4. 00 மணி

நற்கருணை ஆசி: பிற்பகல் 4. 30 மணி

இடம் பெயர்ந்தோர் முகாம் தரிசிப்பு பி. ப. 5. 15 மணி

பங்குத்தந்தை அருட்திரு. J.B. அன்ரனிதாஸ்,
பங்கு மக்கள், மறைக் கோட்டமுதல்வர்,
அருட்தந்தையர்கள்.
(C/20375)



**புவியியல்**

A/L, G.A.Q., B.A. Part I-II
வகுப்புகள் நடைபெறுகின்றன.
2004 ஆரம்பம்:20.01.2002 4.30 p.m.
ஆசிரியர்:
S.R.BALA (B.A. Hons)
N.M.A.
இல. 89, சட்டநாதர் கோயில் வீதி,
நல்லூர். (C/20366)

# இந்தியா-பாகிஸ்தான் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிக்க பவல் வலியுறுத்து

புதுடில்லி,ஜன.19

, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ரயில் மற்றும் பஸ் போக்குவரத்துக்களை மீண்டும் ஆரம்பிக்குமாறும் பாகிஸ்தானுடனான இராஜிய உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புமாறும், இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க வெளிவிவகாரத்துறைச் செயலாளர் கொலின் பவல் வியுறுத்தியுள்ளார்.


புதுடில்லியில் ஜஸ்வந் சிங்குடன் கொலின் பவல்.

கொலின் பவல் நேற்று இந்தியப் பிரதமர் வாஜ்பாயைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அதன்போதே அவர் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

தெற்காசியாவில் ஏற்பட்டுள்ள பதற்றநிலையைத் தணிப்பது தொடர்பாகப் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப்புடன் தான் நடத்திய பேச்சுக்களின் விவரங்களையும் பவல், வாஜ்பாயிடம் தெரிவித்தார்.

முன்னதாக நேற்றுமுன்தினம் இரவு இந்தியா வந்துசேர்ந்த கொலின் பவல், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்கைச் சந்தித்துப் பேச்சுநடத்தினார். அதன்பின்னர் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில் பயங்கரவாதத்துக்கு எதிராக பாகிஸ்தானிய அதிபர் சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். ஆனால் அது போதுமானதா இல்லையா என்பது குறித்து, இந்தியாதான் முடிவுசெய்யவேண்டும் - என்றார். (ம)

# கனடா அமைச்சரவையில் பெரும் மாற்றம்

ஒட்டாவா,ஜன.19

கனடாவின் அமைச்சரவையில் பெரும் மாற்றங்களைச் செய்வதற்கு பிரதமர் ஜீன் கிரேஸியன் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடாவின் பிரதமர் பதவியை அடுத்ததாக அலங்கரிக்கப்போகிறவர் என்று கருதப்பட்டுவந்த கைத்தொழில் அமைச்சர் பிறையன் டொபின் அரசியலில் இருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்திருப்பதை அடுத்து அமைச்சரவையில் இந்த மாற்றங்கள் வருகின்றன.

புதியமாற்றத்தின்படி தற்போது வெளிவிகார அமைச்சராக இருக்கும் ஜோன் மான்லே துணைப்பிரதமராக நியமிக்கப்படவிருப்பதுடன், பல மேலதிக அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்கவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சரவை மாற்ற அறிவிப்பு வெளிவரும்போது தற்போது பதவி வகிக்கும் அமைச்சர்களில் ஒரு டஸின் எண்ணிக்கையானோர் பதவிகளை இழப்பர் அல்லது மாற்றம் செய்யப்படுவர் என்று கருதப்படுகிறது. (ம)

# அமெரிக்க விமானங்கள் நேருக்குநேர் மோதின

## விமானி பலி; மற்றொருவர் காயம்


ஏ-10 தண்டர்போல்ட்' ரக விமானங்கள்

வாஷிங்ரன்,ஜன.19

அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான இரு ஜெற் விமானங்கள் நேருக்கு நேர் மோதி நொறுங்கியுள்ளன. இந்த விபத்தில் விமானி ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு விமானி காயமடைந்தார்.

'ஏ-10 தண்டர்போல்ட்' ரக விமானங்கள் இரண்டே நேருக்கு நேர் மோதியதாக விமானப்படைப் பேச்சாளர் தெரிவித்தார். டேவிட்ஸ் மொன்தான் விமானப்படைத் தளத்தில் இருந்து புறப்பட்ட இந்த இரு விமானங்களும் தளத்திலிருந்து 25 மைல் தொலைவில் மோதி நொறுங்கின எனவும் அவர் சொன்னார்.

ஒரு விமானி மட்டுமே இயக்கும் இந்தவகை விமானங்கள் இலகு ரக எஞ்ஜின்கள் இரண்டைக் கொண்டது. தரை இலக்குகளை, குறிப்பாக டாங்கிகளை இலக்குவைத்துத் தாக்கும் வகையில் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டது. விபத்தில் கொல்லப்பட்ட மற்றும் காயமடைந்த விமானிகளின் பெயர்களை அமெரிக்கா அறிவிக்கவில்லை. (ம)

## தீவிரவாதியின் தாக்குதலுக்குப் பழிவாங்கும் வகையில்

# பலஸ்தீன பாதுகாப்புத் தலைமையகம் மீது இஸ்ரேலிய விமானங்கள் குண்டுத் தாக்கு!

ஜெருசலேம்,ஜன.19

பலஸ்தீன பாதுகாப்புத் தலைமையகம் மீது இஸ்ரேலிய விமானங்கள் நேற்றுக் காலை கடும் குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன. இதனால் தலைமையகக் கட்டடம் கடும் சேதமடைந்தது.

இந்தத் தாக்குதலில் குறைந்தது ஒருவர் கொல்லப்பட்டார்; பலர் காயமடைந்தனர் என்று முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இஸ்ரேலியர் ஒருவரின் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் புகுந்து பலஸ்தீனத் தீவிரவாதியொருவர் நடத்திய தாக்குதலுக்குப் பழிவாங்கும் வகையில் இஸ்ரேலின் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

இத்தகைய பழிவாங்கும் தாக்குதல்கள் மத்தியகிழக்கில் வன்முறைகள் மேலும்மேலும் அதிகரிக்கவே வழிவகுக்கும் என்று அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னதாக நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இஸ்ரேலின் வடபுற நகரான ஹடெறாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த பிறந்தநாள் நிகழ்வு ஒன்றினுள் திடீரெனப் புகுந்த பலஸ்தீன ஆயுததாரி ஒருவர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயேகம் மேற்கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் 6 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர்; 33 பேர் காயமடைந்தனர். ஆயுததாரி பின்னர் பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பலஸ்தீனத் தீவிரவாத அமைப்பான அல்-அக்ஸாவின் தலைவர் இஸ்ரேலியப் படையினரால் கொல்லப்பட்டதற்குப் பழிவாங்கவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.


ஹடெறாவில் நடந்த தாக்குதலில் உயிரிழந்த ஒருவரின் சடலத்தை அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.

இந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாகவே இஸ்ரேல் நேற்று விமானத் தாக்குதலை நடத்தியது. இஸ்ரேலின் தாக்குதலில் பலஸ்தீனப் பொலீஸார் ஒருவர் கொல்லப்பட்டார் வேறு 12பொலீஸாரும் 6 பொதுமக்களும் காயமடைந்தனர் என்று பலஸ்தீன மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

"ஹடெறாவில் நடந்த சம்பவத்தின் மூலம் பலஸ்தீன அதிக்ாரசபை எமக்கு மறக்க முடியாத பாடமொன்றைக் கற்றுத் தந்துள்ளது" என்று இஸ்ரேலிய இராணுவப்பேச்சாளர் தெரிவித்தார்.

கடந்த ஒன்றரை வருடங்களாகத் தொடரும் மத்தியகிழக்கு வன்முறைகளை முடிவுக்குக்கொண்டுவர மேற்குநாடுகள் அக்கறை காட்டியபோதும் இஸ்ரேலின் தன்னிச்சையான செயற்பாடுகள் மற்றும் பலஸ்தீன தீவிரவாதிகளின் கட்டுக்கடங்காத போக்கு என்பன மத்திய கிழக்கில் சமாதானம் ஏற்படுவதை தடுத்து வருவதாக மேற்குலக இராஜதந்திரிகள் தெரிவிக்கின்றனர். (ம)

# கிழக்குத் திமோர் அதிபர் தேர்தல் ஏப்ரலில் நடக்கும்

சிலி,ஜன.19

கிழக்குத் திமோர் இந்தோனேஷியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் அங்கு முதலாவது அதிபர் தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் 14ஆம் திகதி நடத்தப்படும் என ஐ.நா. அறிவித்துள்ளது.

அதிபர் தேர்தலை நடத்துவதற்கென ஆணைக்குழு ஒன்றையும் ஐ.நா. அமைத்துள்ளது.

உலக அரங்கில்

இந்தக் குழுவில் மூன்று கிழக்குத் திமோரியர்களும் இரண்டு சாவதேசப் பிரதிநிதிகளும் அடங்கி இருப்பர் என்று ஐ.நாவின் திமோர் நிர்வாக அதிகாரி பாபறா ரெய்ஸ் தெரிவித்தார்.

அதிபர் தேர்தலில் ஒருவர் போட்டியிட வேண்டுமாயின் அவர் தனக்கு ஆதரவான 5.ஆயிரம் பேரின் கையெழுத்துக்களைச் சேகரித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் ரெய்ஸ் கூறினார்.

தேர்தல் முடிவுகளை ஏப்ரல் 17 ஆம் திகதி வெளியிடுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு இந்தோனேஷியாவிடம் இருந்து கிழக்குத் திமோர் சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் அங்கு நடைபெற உள்ள முதலாவது அதிபர் தேர்தல் இதுவாகும். கடந்த ஆண்டே அங்கு நாடாளுமன்றத் தேர்தல்கள் முதற்றடவையாக நடைபெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

# கொங்கோவில் உள்ள எரிமலை வெடித்தது!

## ஆயிரக்கணக்கில் மக்கள் வெளியேற்றம்

கொங்கோவின் கிழக்குப் புறநகரான கோமாவுக்கு வெளியே உள்ள எரிமலை ஒன்று வெடிக்க ஆரம்பித்துள்ளது. வெடித்துப் பறக்கும் எரிமலைக் குழம்புகள் நகரப் பகுதிகளிலும் வந்து வீழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

எரிமலை வெடிக்க ஆரம்பித்துள்ளதை அடுத்து அதனை அண்டியிருந்த கிராமங்கள் மற்றும் நகரங்களைச் சேர்ந்த மக்கள் கார்களிலும் 'ட்ரக்'குகளிலும் கால்நடையாகவும் அண்டை நாடான ருவாண்டாவுக்கு இடம்பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

கோமா நகரில் இருந்து 10 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள நைரா கொங்கோ என்ற எரிமலையே வெடித்துள்ளது. மலையிலிருந்து வெளியேறும் எரிமலைக் குழம்பு மலைக்கும் நகரத்துக்கும் இடையே ஓடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை வெளியேறிய எரிமலைக் குழம்புகள் காடுகளுக்கூடாக ஓடி கிராமப்புறங்களுக்குள் புகுந்துள்ளதாகவும் -

14 கிராமங்கள் இதுவரை நிர்மூலமாகியுள்ளதாகவும் -

அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் உயிரிழப்புக்கள் குறித்து தகவல்கள் வெளியாகவில்லை.

எரிமலைக் குழம்பு கோமா நகரின் விமான நிலையத்தினுள்ளும் வீழ்ந்து வருவதால் அங்கிருந்த சகல விமானங்களையும் வெளியேறுமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். எரிமலை வெடித்ததனால் 4 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறியுள்ளனர். (ம)


கொங்கோவில் வெடிக்கும் எரிமலையிலிருந்து வெளிக்கிளம்பும் எரிமலைக் குழம்பு பறந்து வந்து கிராமப் பகுதிகளில் வீழ்ந்து எரிகிறது. இதனையடுத்து கிராமவாசிகள் அச்சம் காரணமாக பாதுகாப்பான இடங்களைத் தேடி ஓடுகிறார்கள்.

# அமெரிக்க தாக்குதல் எதனையும் எதிர்கொள்வதற்கு ஈராக் தயார்

## அதிபர் சதாம் சூளுரை

பக்தாத்,ஜன.19

அமெரிக்காவின் எந்தவொரு தாக்குதலையும் எதிர்கொள்வதற்கு ஈராக் தயார் என்று ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் தலைநகர் பக்தாத்தில் சூளுரைத்துள்ளார்.

சர்வதேச ஆயுதக் கண்காணிப்பாளர்களை ஈராக், நாட்டுக்குள் அனுமதிக்கவில்லையெனில் அதற்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்று அமெரிக்க அதிபர் புஷ் விடுத்திருந்த எச்சரிக்கைக்குப் பதிலளிக்கும் வகையிலேயே சதாம் மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

அமெரிக்கா இனிவரும் காலங்களில் ஈராக்மீது மேற்கொள்ளும் எந்த இராணுவ நடவடிக்கையும் தோல்வியடையும் என்றும் சதாம் கூறினார்.

வளைகுடாப் போரின் 11ஆவது நினைவுதினத்தை முன்னிட்டுத் தொலைக்காட்சியில் உரையாற்றிய போதே அதிபர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வளைகுடா யுத்தத்தின்போது அமெரிக்காவுடன் சண்டையிட்ட அனுபவம் ஈராக்கின் நலன்களைப் பாதுகாக்கும். அமெரிக்கா ஈராக்கை வலுச்சண்டைக்கு இழுத்து இன்று 11 வருடங்கள் கழிந்துவிட்டன. ஆனால் தொடர்ந்தும் அமெரிக்கா எம்மை வலுச்சண்டைக்கு இழுக்கின்றது. எமது மக்களுக்கு இது ஆச்சரியம் தரக்கூடிய ஒருவிடயமல்ல - என்றார்

ஈராக் தொடர்ந்து உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்களை உருவாக்கிவருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டுகின்றது. ஆனால் சர்வதேச ஆயுதக் கண்காணிப்பாளர்கள் சோதனையிடுவதற்காக ஈராக் தனது ஆயுதத் தொழிற்சாலைகளைத் திறந்து விடவேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்திவருகின்றது.



ஆனால் சர்வதேச ஆயுதக் கண்காணிப்பாளர்கள் அமெரிக்காவின் உளவாளிகள் என்று ஈராக் அஞ்சுகின்றது. அதனால் அவர்களை நாட்டுக்குள்விட ஈராக் மறுத்துவருகின்றது. (ம)

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 14 - 04 - 1947



உதிர்வு 17 - 01 - 2002

மண்கும்பானை சேர்ந்த

அமரர்

## ஐயம்பிள்ளை நடராசா

*(உரிமையாளர், மைதிலி ஜுவல்லர்ஸ், மதனா ஜுவல்லர்ஸ்)*

அவர்கள் 17-01-2002இல் காலமான செய்திகேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதுடன், அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.

புதிய நதியா நகை மாடம்
இல.103, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(97269)

## சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு,ஜன.19

ஏழாலை வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று முதல் ஆரம்பமாகி பத்து தினங்கள் தொடர்ந்து நடைபெறும்.

தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி புதன்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் முற் பகல் 11 மணிக்கு சிவத்திரு வ.குமாரசாமி ஐயாவின் "அன்னையின் அருளாட்சி" பற்றிய சமயச் சொற் பொழிவு நடைபெறும். (க-152)

☆ ☆ ☆

பருத்தித்துறை கற்கோவளம் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த திருவிழா நடைபெற்று வருகிறது. இன்று சனிக்கிழமை மாலை நற்கருணை வழிபாடு இடம்பெறும். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை திருநாள் திருப்பலி, திருச்சொருப பவனி, சொருப ஆசீர் என்பனவற்றுடன் விழா நிறைவுபெறும். (க)

☆ ☆ ☆

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக் கிழமை அதிகாலை 6.35 மணிக்கு பாலஸ்தாபன கும்பாபிஷகம் இடம் பெறவுள்ளது.

ஆரம்ப கிரியைகள் இன்று சனிக் கிழமை அதிகாலை முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும்.(ஒ-6)

☆ ☆ ☆

ஓட்டுமடம் புனித செபஸ்தியார் ஆலயத்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது. அன்று காலை 7.30 மணிக்கு திருநாள் திருப்பலியும், திருச்சொருப பவனியும் தொடர்ந்து திருச்சொருப ஆசியும் இடம்பெறவுள்ளன. (ஒ-3)

## ஆரம்பக் கல்வி கற்பித்தல் சாதன கண்காட்சி

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளின் ஆரம்பக் கல்வி கற்பித்தல் சாதனக் கண்காட்சிப் போட்டிகள் இன்றும் எதிர்வரும் 21ஆம், 26ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் கண்காட்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியிலும் -

யாழ்ப்பாணக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.புனித மரியாள் வித்தியாலயத்திலும் -

கோப்பாய்க் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் கண்காட்சி எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் -

நடைபெறவுள்ளன.

உரிய பாடசாலைகள் தமது சாதனங்களைக் காட்சிப்படுத்துமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஜ-10)

# கண்ணீர் அஞ்சலி



## ஐயம்பிள்ளை நடராசா

(உரிமையாளர், மைதிலி ஜுவல்லர்ஸ், மதனா ஜுவல்லர்ஸ்)

அவர்கள் 17.01.2002 காலமான செய்திகேட்டு ஆழ்ந்த கவலையடைவதுடன், அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வினோ நகைப் பூங்கா
185,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.2824

(C-20358)

# வாடாத நம் நினைவில் தேனான நமது அன்னையின் 31ஆம் நாள் நினைவு

இருவருக்கு மகளாக 1937 - 08 - 25



இறைவனுக்குச் சரமாக 2001 - 12 - 20

திருமதி

## சின்னம்மா நாகலிங்கம் *(சேனாதிராசா)*

நினைக்கின்ற போது சோக நீர்கொட்டி நம் விழியை
நனைக்கின்ற நேரமெல்லாம் நீங்களே நமது முன்னால்
அணைக்கின்ற கரங்களாலே அணைத்தெங்கள் துயரம் அன்று
துடைத்திட்ட தாயே இன்று எமைவிட்டு ஏன்சென்றீர்கள்
அன்னையே!

வான் வாழும் தங்களுக்கு எமது கண்ணீர்க் காணிக்கை
- நீங்கள் பெற்ற மக்கள்.

எமது பாச உயிரின் நினைவாக இன்று(2002-01-19) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*இல. 17, 5ஆம் ஒழுங்கை,*
*பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(97271)

# மரண அறிவித்தல்

## இளையவன் சண்முகம்

*(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்)*

பளை, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவரும் தற்போது சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளையவன் சண்முகம் 17.01.2002 வியாழக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், திருமதி ஆ.பரமேஸ்வரியின் அன்புத் தந்தையாரும், க.ஆனந்தராசா(சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், கமநல அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மாமனாரும் இ.தம்பு(முன்னாள் தொழிற் சங்கப் பிரமுகர்), திருமதி க.சரஸ்வதி, காலஞ்சென்றவர்களான இ.சபாபதி, இ.நாகேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி சிறிரஞ்சினி கேதீஸ்வரன், தயானந்தன்(லண்டன்), சண்முகானந்தன், சிறீ சுபாசினி(யாழ்.பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு முதலாம் வருட மாணவி, மருதனார்மடம்), சுரேஸ்ஆனந்தன், சிறிதர்சினி, ஸ்கந்தானந்தன் (யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புப் பேரனும், கிருஷ்ணா, மிதுர்சன், அனேஷன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19-01-2002) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று,பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் கோத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*த.முகவரி:*
*Dr.சுப்பிரமணியம் வீதி,*
*சுன்னாகம்.*
(97275)

தகவல்:
க.ஆனந்தராசா
*(சிரேஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர், யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்களம்)*

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 10ஆம் ஆண்டு நினைவுகூரல்

தோற்றம் 25 - 02 - 1943



மறைவு 09 - 02 - 1992

பாசத்தின் திருவுருவமாய்
பண்பின் உறைவிடமாய்
எங்களுக்கெல்லாம் அன்பு காட்டி
அரவணைத்த எம் தெய்வமே!
நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து
பத்து ஆண்டுகள் அல்ல பல
நூறு ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களை விட்டு
என்றும் மாறாதையா!

இன்று (19.01.2002) சனிக்கிழமை நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## அமரர் மு.இரத்தினவேலு

(சந்தனம்) திதி: 19.01.2002

*உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமகன், மருமகள்,
பேர்த்தி, பேரன்.

*நினைவு கூரல்:*
பிறேம் நகைமாடம்
தங்க நகை வியாபாரம்
[22 கரட் தங்க நகைகள் செய்து கொள்வதற்கு தலைசிறந்த ஸ்தாபனம்]
யாழ்வீதி, மானிப்பாய்.
மகன்:- பிறேம்குமார்.

*சேச் லேன்,*
*கூழாவடி,*
*ஆனைக்கோட்டை.*

(97238)

உதயன்

## யாழ்.நீதிமன்றின் அவதானம்

யாழ். குடாநாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் மட்டுமல்லாமல், மக்களின் அன்றாட அத்தியாவசியத் தேவைகள் - சேவைகள் போன்றவற்றை உரியமுறையில் பெற்றுக்கொடுப்பதற்கான விடயத்திலும் யாழ். நீதிமன்றம் சிரத்தை எடுத்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

அண்மைக்காலத்தில் குடாநாட்டு மக்களைப் பெரும் அவலத்துக்குள் வீழ்த்தியிருக்கும் விடயங்களில் முக்கியமானது எரிபொருள் தட்டுப்பாடாகும். அதிலும் பாமர மக்களினதும் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான மண்எண்ணெய் விநியோகத்தில் இடம்பெறும் குளறுபடிகள் எல்லை மீறியவை.

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான மண்எண்ணெயை இங்கு எடுத்துவருவதில் சிக்கல் இருப்பது ஒருபுறமிருக்க, அப்படி எடுத்துவரப்பட்ட மண்எண்ணெயை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதிலும் பல குளறுபடிகள், தில்லுமுல்லுகள். கள்ளச் சந்தை வியாபாரிகளை தட்டிவளர்க்கும் முக்கிய பொறுப்பை மண்எண்ணெய் விநியோகப் பகுதி ஏற்றுக் கொண்டுவிட்டதோ என்று எண்ணுமளவுக்கு நிலைமை மோசம்.

மண்எண்ணெய் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாமல் எரிபொருள் விற்பனை முகவர்கள் ஊடாக வழங்கப்பட்டதால் கள்ளச்சந்தை மற்றும் பதுக்கல் வியாபாரிகளுக்குப் பெரும் கொண்டாட்டமாகிவிட்டது.

நிலைமை கட்டுமீறுவதை அவதானித்த நீதிமன்றம், இந்த விவகாரத்தில் தலையிடவேண்டியதாயிற்று.

மக்களுக்கு மண்எண்ணெய் சீராக விநியோகிக்கப்படுவதற்கான திட்டம் ஒன்றைத் தயாரித்து, சம்பந்தப்பட்டோருக்கு உரிய பணிப்புரை விடுத்து, அந்தத் திட்டத்தைச் செயற்படுத்துமாறு யாழ். அரச அதிபருக்கு உத்தரவு பிறப்பித்தது நீதிமன்றம்.

அத்தோடு நிற்காமல், திட்டம் உரியமுறையில் செயற்படுத்தப்படுகின்றதா என்பதைக் கண்காணிப்பதிலும் நீதிமன்றம் மிக அவதானமாக இருக்கின்றது. அந்தத் திட்டத்துக்கு முரணாக மண்எண்ணெய் தனியாருக்கு விநியோகிக்கப்பட்டதைக் கண்டுபிடித்து, 24 மணிநேரத்துக்குள் உரியநடவடிக்கை எடுத்து, அப்படி விநியோகிக்கப்பட்ட மண்எண்ணெயை மீளப்பெற நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்டோருக்குக் கடுமையான உத்தரவு விடுத்ததிலிருந்து நீதிமன்றின் கண்காணிப்புத் தெளிவாகத் தெரியவந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல், அந்த உத்தரவில் நீதிவான் இ.த. விக்னராஜா குறிப்பிட்ட மற்றதோர் அம்சம் இன்றைய நிலையில் முக்கியமாக நோக்கத்தக்கதாக உள்ளது. மக்களுக்கு மண்எண்ணெய் சீராக விநியோகிக்கப்படுவதற்கு அரச அதிபர் வகுத்துள்ள திட்டத்தைக் குழப்பும் அதிகாரிகள் மீது அரச அதிபர் உரிய ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கலாம்; அத்தகையோர் இந்த நீதிமன்றத்தின் உத்தரவை அவமதித்ததற்கான நடவடிக்கைக்கும் உள்ளாவார்கள் என்று தெரிவித்துள்ள நீதிவான், மக்களின் அடிப்படை உரிமை மீறிய குற்றச்சாட்டுக்காக அத்தகையோர் உயர்நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படும் நிலையும் உருவாகும் என்று சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

மண்எண்ணெய் போன்ற அத்தியாவசியப் பொருள்களைத் தங்கு தடையின்றிப் பெற்றுக்கொள்வது மக்களின் அடிப்படை உரிமை. அதை மீறுவது அல்லது மக்களுக்கான அவற்றின் விநியோகத்தைத் தடுப்பது, குழப்புவது, சீர்குலைப்பது போன்றவை அடிப்படை உரிமைமீறலாகக் கணிக்கப்படக் கூடியவை. அத்தகைய செயல்கள் நாட்டின் உச்ச நீதிமன்றமான உயர்நீதிமன்றத்தினால் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும் என்பதை நீதிவான் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இதனை அதிகாரிகள், அரசியல்வாதிகள் புரிந்துகொண்டால் நல்லது.

நுகர்வோர் சங்கம் போன்ற மக்கள் சார்பு அமைப்புகளும் இத்தகைய உரிமையைக் கையில் எடுத்து, மக்களின் அத்தியாவசிய சேவைகளைக் குழப்பும் பெருச்சாளிகளுக்கு சாட்டைஅடி கொடுக்க முன்வர வேண்டும்.

# சபாநாயகர் மாற்றப்படுவாரா?

கொழும்பு,ஜன.19

சபாநாயகர் பதவியில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பாக அரசு கவனம் செலுத்திவருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போதைய சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்குப் பதிலாக முன்னாள் சபாநாயகர் எம்.எச்.முஹம்மத்தை நியமிப்பது தொடர்பாக முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாக 'லக்பிம' பத்திரிகை தெரிவித்தது.

அண்மையில் காலமான காமினி அத்துக்கோறள வகித்த நெடுஞ்சாலைகள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பதவி ஜோசப் மைக்கல் பெரேராவுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதேவேளை -

பிரதி சபாநாயகர் பதவியை ஏற்பது தொடர்பாக இதுவரை கடும்போக்கை அனுசரித்து வந்த ஜனாதிபதி தற்போது 'பச்சைக் கொடி' காட்டியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொ.ஐ.முன்னணியைச் சேர்ந்த பெரும்பாலோரின் விருப்பத்துக்கு அமையவே ஜனாதிபதி இந்த முடிவுக்கு வந்துள்ளாராம். இருப்பினும அண்மையில் நடைபெறவுள்ள ஸ்ரீ.ல.சு.கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலேயே இதற்கான ஒப்புதல் பெறப்படும் எனவும் பிரதி சபாநாயகர் பதவிக்கு பொ.ஐ.முன்னணி சார்பில் இளம சட்டத்தரணி ஒருவரின் பெயர் முன்மொழியப்படும் எனவும் முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவிதத்துள்ளார். இருப்பினும் மார்ச் மாத முடிவுக்குள் பொ.ஐ.முன்னணி பிரதி சபாநாயகர் பதவியை ஏற்காவிடின் அப்பதவிக்கு ஐ.தே.கட்சியைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்படுவார் என ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பிரதி சபாநாயகரா பேரியல் அஷ்ரப் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## விளையாட்டு வினையானதால் 3சிறுவர் காயம்!

ஒட்டுசுட்டான் கற்சிலைமடுப் பகுதியில் 'ஷெல்' போன்ற ஒரு வெடிப்பொருளை கையில் வைத்து விளையாடிய மூன்று சிறுவர்கள் அது வெடித்ததில் காயமடைந்தனர். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தர்சன் (வயது 9), சஞ்சீவன் (வயது 7), தேனுஷா (வயது 5) ஆகியோரே காயம் அடைந்தவர்களாவர். கற்சிலைமடுவில் படையினர் முன்னர் நிலை கொண்டிருந்தசமயம் இந்த வெடிபொருளை கைவிட்டுச் சென்றிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ஒ-3)



ஓய்வுபெற்ற அருட்தந்தையர்களுக்கான இல்லம் ஒன்று யாழ். பிரதான வீதியில் நிறுவப்பட்டுள்ளது. அந்த இல்லத்தின் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

முன்னாள் ஆயர் அமரர் எமிலியானுஸ்பிள்ளையின் 100ஆவது பிறந்ததின ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட இந்த இல்லத்தை யாழ்ப்பாணம் வந்துள்ள பாப்பரசரின் இலங்கைப் பிரதிநிதி இன்று திறந்துவைப்பார். (ஐ-6)

### யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு

# 200பேர் தகுதி பெற்றுள்ளபோதும் 80 மாணவருக்கே விடுதி வசதி

யாழ்ப்பாணம்.ஜன.19

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு இவ்வாண்டு அனுமதி பெற 200 மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர். ஆனால் 80பேர் தங்கவே விடுதி வசதியுள்ளதால் சகலருக்கும அனுமதி வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படிக் கூறுகின்றார் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி தி.கமலநாதன்.

இது விடயமாக அவர் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண கல்வியியற் கல்லூரியில் 80 மாணவர்கள் தங்கி கல்வி கற்கவே வசதியுள்ளது இதற்குமேல் மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

கல்விபயிலத் தகுதியுடைய மாணவர்கள் யாவரும் பயில வசதியாக கல்லூரிக்கு அருகில் உள்ள வீடுகளில் விடுதி அமைக்க பொது மக்கள் உதவவேண்டும்.

இது விடயமாக முன்னர் முயற்சி மேறகொள்ளப்பட்டது. ஆனால் அந்த முயற்சி பலன் அளிக்கவில்லை.

பொதுமக்கள் இந்த விடயத்தில் அக்கறை காட்டி விடுதி வசதிகளை ஏற்படுத்த வீடுகளை வழங்க வேண்டும் - என்று கேட்டுள்ளார். (க-3)

### உதயவாக்கு

எவன் ஒருவனுக்குத் தூக்கமும், தூக்கமும் குறைவாக உள்ளதோ அவன் மேதையாகிறான்.

### நாளை

தை 07
ஞாயிற்றுக்கிழமை
(20-01-2002)
திதி : ஸப்தமி
முழுநாளும்
நட்சத்திரம்: ரேவதி
காலை 6.06 வரை.
ரதஸப்தமி நாள்
சுபநேரம் : 9.35 - 11.05
ராகுகாலம் : 5.05 - 6.35
(பழைய நேரப்படி)

# நாட்டு நடப்பு

## ஆணை எதுவென அறிந்திடுவீர்!

வேண்டும் எமக்கொரு நாடென்று முழங்கிய
வீரரும் உமக்கே விரும்பி வாக்களித்தார்
ஆண்டநம் மண்ணினை மீண்டும் ஆண்டிட
அனைத்து மக்களும் உமக்கு ஆணையிட்டார்
கூண்டினில் அடைத்த குஞ்சு கிளிகட்கு
கொவ்வைப்பழம் சில தந்தது போல்
வண்ணக்கப்பலில் உணவு பல கொண்டு
வயிறார உணவு எமக்கு வந்திடுமாம்
கண்ணிரண்டும் கட்டி கைவிலங்கிட்டபின்
கற்கண்டு பாகுதான் இனித்திடுமோ?
செத்துடல் பாடையில் செல்கின்ற போதினில்
சேர்த்துப் படைப்பதில் என்ன பலன்?
மண்ணினை மீட்டுமுன்மணிகோடி ஏற்றியே
மகிழ்ந்து குதூகலிக்க வைத்ததன்பின்
உண்டியும் எண்ணையும் உறைவிடமும் தந்து
உள்ளம் மகிழ்ந்து கொண்டாடிடுவீர்.

*- விகடகவி.*

# உள்ளூராட்சித் தேர்தல்களை கிழக்கில் நடத்த வேண்டும்

### ரணிலிடம் முஸ்லிம் காங்கிரஸ் கோரிக்கை

கிழக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசைக் கோரியுள்ளது.

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் தலைவர்களுடன் கடந்தவாரம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடத்திய கலந்துரையாடலின்போது இந்த விடயத்தை அவர் கூட்டமைப்பினிடம் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

சமாதானப் பேச்சுக்கான முயற்சிகளில் இணக்கநிலை ஒன்று எட்டப்பட்டபின்பே வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை நடத்தவேண்டும் என்று தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பின் தலைவர்கள் பிரதமரிடம் முன்னர் கோரியிருந்தனர்.

கிழக்கில் தேர்தல் நடத்த வேண்டாம் என்று ஐக்கியதேசிய முன்னணி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆகியனவும் கோரியுள்ளன. (ஐ-3)

### செவிப்புலன் குறைபாடுடைய

# பெண்களுக்கான விடுதி முல்லைத்தீவில் திறப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் இயங்கும் 'இனிய வாழ்வு' இல்லத்தின் செவிப்புலன் குறைபாடுடைய பெண்களுக்கான விடுதி ஒன்று கடந்த புதனன்று முல்லைத்தீவில் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் சி.சுந்தரம் இந்த விடுதியைத் திறந்து வைத்தார்.

'இனிய வாழ்வு' இல்லத்தின் தலைவர் தம்பு விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வள்ளிபுனம் கிராம அலுவலர் க.சிவராசா, மாவட்டப் பதிவாளர் எஸ்.பவானந்தன், போரூட் நிறுவன பிரதிநிதி சுடர் ஆகியோர் மங்கள விளக்கினை ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.செல்வம் ஏற்றி வைத்தார்.

விடுதியின் பெயர்ப் பலகையை தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பகுதி இணைப்பாளர் திரைநீக்கம் செய்து வைத்தார். வண.பிதா யாவீஸ் அடிகளார் ஆசியுரை நிகழ்த்தினார்.

முல்லை மாவட்ட அரச அதிபர் எஸ்.சுந்தரம், வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலை* அதிபர் திருமதி மு.ஜெயகௌரி ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

செவிப்புலன் குறைபாடுடைய பெண்களுக்கான விடுதி இதுவரை காலமும் கொட்டகைகளில் இயங்கி வந்தது. இதனால் மழை காலத்தில் பல்வேறு அசௌகரியங்கள் எதிர்நோக்கப்பட்டன. (க-7)

# சுயநிர்ணய உரிமையை 80களிலேயே வலியுறுத்திய சாந்தனின் படைப்புகள்

### நூல் அறிமுக அரங்கில் உரை

யாழ்ப்பாணம்,ஜன.19

தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை எண்பதுகளிலேயே தமது கலைப்படைப்பாக்கங்கள்மூலம் எழுத்தாளர் சாந்தன் வலியுறுத்தினார். அவருடைய 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்' குறுநாவல் இதற்கு நல்ல சான்றாகும்.

- இவ்வாறு கூறினார் யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறைத் தலைவர் வி.பி.சிவநாதன்.

கடந்த சனியன்று யாழ்பல்கலைக் கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சாந்தனின் இரு நூலகளின் அறிமுக அரங்கில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெற்ற இவ்வரங்கில் அவர் மேலும் பேசுகையில் -

"இடதுசாரிகள் ஐம்பதுகளுக்கு முன்பிருந்தே இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொண்டுவந்திருக்கிறார்கள். மாக்ஸிஸ - லெனிஸிஸ சித்தாந்தங்களின் பெறுபேறான சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டினை, அந்த சித்தாந்தங்களைப் பின்பற்றி நின்றவரான சாந்தன் தமது ஆக்கங்கள் மூலம் முன்னெடுக்க முயன்றது இயல்பானதே. எனினும் இவற்றின் முக்கியத்துவம் அவ்வக்காலங்களில் உணரப்படாது போயிற்று" - எனக் குறிப்பிட்டார்.

கலாநிதி சி.சிவலிங்கராஜா தமது உரையில், இனப்பிரச்சினையின் முழுப் பரிமாணத்தையும் தமது ஏழெட்டு வரிக் கதையின்மூலமே சாந்தன் உணர்த்திவிடுவது அற்புதமானது எனக் கூறினார்.

பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் பேசுகையில் -

கடந்த மூன்று தசாப்தங்களின் முழுமையான பிரதிபலிப்பை சாந்தனின் ஆக்கங்களில் நாம் காணக்கூடியதாக உள்ளது. எமது மண்ணின் வரலாற்று ஆவணங்களாக அவர் கதைகள் அமைகின்றன - என்றார்.

ஆங்கிலக் கதைத் தொகுதி பற்றி உரைநிகழ்த்திய அருட்திரு.ஜெயசீலன் அடிகளார், யாழ்ப்பாணத்தவரின் உளப்பாங்கினைச் சித்திரிக்கும் சாந்தனின் கலைப் படைப்பாக்கங்கள் தனித்துவம்மிக்கவையாக மிளிர்கின்றன. ஆங்கிலம் போதனா மொழியாக இல்லாத காலத்திலும் ஆசிரியர் இவற்றை எழுதிக் கவனம் பெறுவது முக்கியமானது - என்றார்.

இலங்கைக் கலைக் கழகத்தின் ஆங்கில ஆக்க இலக்கியத்துக்கான சாகித்திய மண்டல விருதினைப் பெறும் முதல்தமிழர் என்ற வகையில் சாந்தனைப் பாராட்டி தமிழ் மன்றத்தினர் வாழ்த்துப்பா ஒன்றினையும் வழங்கிக் கௌரவித்தனர்.

இவ்வரங்கில் பேராசிரியர் சபா.ஜெயராசா நூல் அறிமுகவுரையினை ஆற்றினார். சட்டத்தரணிகளான ந.ஜீவேஸ்வரா, பொன்.பூலோகசிங்கம் ஆகியோரும் நூல் விமர்சனங்களை ஆற்றினர். (ஐ)

# IBMS கணனி நிறுவனத்தின்

## CERTIFICATES A

## INSTITUTE OF BUSINES

## 2001/

## அருளாசிச் செய்தி



அன்புசார் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் IBMS கணனிப் பயிற்சி நிறுவனம் தனது முதலாவது சான்றிதழ் வழங்கும் விழாவை நடத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். விஞ்ஞானமும், அறிவும் வளர்ச்சியடைந்திருக்கும் இக்காலத்தில் மனிதன் சிந்தித்து தன்வாழ்வை வளப்படுத்த பலதொழிற்கல்விகள் இன்று நம் பிரதேசத்தில் வளர்ச்சியடைந்து வருவது எல்லோருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. தொழில்நுட்பவளர்ச்சியின் இன்றைய கணனிமயமாக்கலை அனைவரும் கற்றுக்கொள்ளவேண்டிய இக்காலத்தில் IBMS நிறுவனம் யாழ்ப்பாணத்தில் இப் பணியை செய்துகொண்டிருப்பது மனநிறைவைத் தருகின்றது. இப்பணிக்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டி ருக்கும் விரிவுரையாளர்கள், இயக்குநர்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள். இன்று சான்றிதழ் பெறும் மாணவ, மாணவிகள் மேலும் இத்துறையில் வளர்ச்சியடைந்து தமக்கும் நாட்டிற்கும் சேவையாற்ற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இந்நிறுவனத் தினை இறைவன் ஆசீர்வதிப்பாராக.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்.**

## யாழ்.அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி!



ஐ.பி.எம்.எஸ். நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்துக்கு என் நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

புதிய மிலேனியத்தை கணனியுகம் என்றழைத்தலே பொருத்தமானதாகும். கணனிப்பயன்பாடு உலகளாவிய ரீதியில் அனைத்துத் துறைகளிலும் மனித வாழ்வின் அங்கமாகியிருக்கும் இன்றைய காலகட்டத்தில் கல்விக்கும் அறிவியலுக்கும் முதலிடம் அளித்ததால் பெருமை பெற்ற இக்குடாநாடு இன்று எதிர்நோக்கும் சூழலைக் காரணங்காட்டி கணனித்துறையில் பின்தங்குவதை அனுமதிக்கமுடியாது. நாள்தோறும் இத்துறையில் ஈட்டப்பட்டுவரும் முன்னேற்றத்துக்கீடான வகையில் புதிய சவால்களுக்கு முகம்கொடுக்க எமது இளைய சமுதாயமும் தயார்ப்படுத்தப்பட வேண் டும் என்பது காலத்தின் தேவை.

பாரம்பரியமாக எமது சமூகத்திற்குப் பெருமை சேர்க்கும் கலாசார பண்பாட்டு விழுமியங்களைப் பேணிவரும் எம்சமூகம் அறிவியலின் புதுமைகளை என்றும் புறக்கணித்ததில்லை. இதற்கமைய கணனிக்கல்வி தொடர்பில் எமது மாணவர் சமூகம் காட்டிவரும் ஆர்வம் மெச்சத்தக்கது. இந்த ஆர்வத்திற்குக் களம் அமைத்துக்கொடுத்து தரமான விரிவுரையாளர்களையும், கணனித்துறையில் பட்டம்பெற்ற விரிவுரையாளர்களையும், அதிநவீன கணனிகள் மற்றும் அதுசார் உபகரணங்களையும் சராசரித் தேசிய தரத்துக்கும் மேலாக இன்றைய காலகட்டத்திலும் இந்நிறுவனம் கொண்டு இயங்குவது பெரிதும் பாராட்டுக்குரியது. கணனித்துறையில் ஈட்டப்பட்டுவரும் அதிவேகமான முன்னேற்றத்தை உடனுக்குடன் உள்வாங்கி மாணவர்களுக்கு வழங்குவது இந்நிறுவனத்தின் சிறப்பு.

புதிய மிலேனியத்தின் பிறப்புடன் இந்நிறுவனம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுடன் இணைந்து நடத்திய கண்காட்சி வியத்தகு முறையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததை அவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டபோது அவதானிக்க முடிந்தது. எதிர் காலத்தில் இந்நிறுவனம் மேலும் பரந்த கல்விச் செயற்பாட்டில் தன்னை ஈடுபடுத்தி எமது இளைய தலைமுறையின் வாய்ப்புக்களை அதிகரிக்க முன்வரவேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கின்றேன்.

**- க. சண்முகநாதன்.**
**அரச அதிபர்.**




## MESSAGE FROM THE DIRE

It gives me great pleasure to sent this Message, in my official capacity, to the special Award Ceremony of the Institute of Business Management Studies.

I am happy to note that though the IBMS was set up only in 1999, it has within a enrolment tenfold and is today one of the leading Computer Training Institutes in Ja

I must thank the Management and the Staff - both academic and non - academic, as a team to help the IBMS to attain this enviable position.

I wish the IBMS greater success in the future.

## சான்றிதழ்பெறும் மாணவர்களின் உள்ளத்தி

இது கணனியுகம், இக்கணனியுகத்தில் யாழ்.மாணவர்களின் கணனிக் கற்கைநெறிக்கு பெரும் பங்காற்றும் நிறுவனங்களில் IBMSஉம் ஒன்று. இந்நிறுவனம் ஆரம்பித்து குறுகிய காலத்திலேயே உச்சப்படிகளை எட்டி, விறுநடை போட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் இரு கிளைகளையும் ஆரம்பித்து தனது கற்கைநெறியை விரிவுபடுத்தியிருப்பதுடன், கணனி கற்கும் ஆர்வமுடையவர்க்குப் பேருதவியாக அமைகின்றது. இதன் ஆரம்பமும், வளர்ச்சியும் கணனிக் கற்கை நிறுவனங்களிடையே தீவிர போட்டியை ஏற்படுத்தி இன்று யாழ்.சமுதாயம் குறைந்த கட்டணங்களுடன் கற்க பெரும் பங்காற்றியிருக்கின்றது. அத்துடன் IBMSஉம் யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர்களும் இணைந்து முதன்முதலில் யாழ் குடாநாட்டிலேயே நடத்திய கணனிக்கண்காட்சி சிறார் முதல் பெரியோர் வரை போற்றத்தக்கதாகவும், பயனுடையதாகவும் அமைந்தது. இக் கண்காட்சியின் பின் IBMS நிறுவனம் எல்லோர் வாயிலும் உச்சரிக்கப்படுவதாக அமைந்தது என்றால் மிகையாகாது.

இந்நிறுவனத்தின் அழகான வெளிச்சூழலும், தூய்மையான உட்சூழலும் மனதைக் கவருபவை. நட்பான வழிகாட்டிகளும், எண்ணிலடங்கா கணனிகளும், சிறப்பானதும் தெளிவானதுமான விரிவுரைகளும் மீண்டும் மீண்டும் இங்கே கற்கத் தூண்டும் அம்சங்கள். எந்நேரமானாலும் கணனிப் பயிற்சிக்கு அனுமதிக்கும் தன்மை குறிப்பிடத்தக்கவை. இச்சிறப்பியல்புகளோடு மேலும் புதியபுதிய கற்கைநெறிகளை ஆரம்பித்து யாழ்.சமுதாய கணனிக் கற்கைநெறிக்கு பங்களிக்கவேண்டும்.

**தற்பரானந்தேஸ்வரசர்மா சாதனா,**
**மாணவி.**

யாழ்.மாவட்டத்தில் சந்திக்குச் சந்தி கணனி நிறுவனங்கள்
மிகக் குறைந்த காலகட்டத்திலேயே ஆல்போல் வளர்ந்து அறுகுபோல்
பிரகாசித்துக்கொண்டிருக்கும் IBMS நிறுவனம், இன்று 3ஆவது அக
வைபவத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், அதற்கு வாழ்த்துச்
இன் ஆரம்பகாலத்தில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில்
பெற்றதன்மூலம் பணம்படைத்தவர்களுக்கு மட்டுமே கணனி என்ற
கணனிக் கல்வியை கற்கமுடிந்தது என்பதை பெருமையுடன் தெரி
என்னால் மிகுந்த ஈடுபாடுகாட்டி என்னை இந்நிறுவனத்திலேயே க
அது மட்டுமன்றி என்னால் இங்கு தொடர்ந்து சிறந்த பயிற்சிபெற்று,
அரசநிறுவனம் ஒன்றில் நிரந்தர அரச உத்தியோகம் ஒன்றைப் பெற்றுக்
நிலையை அடைவதற்கு IBMS நிறுவனமும் காரணம் என்பதை கூறி

பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லையே! என ஏங்கித் தவிக்
மிகச்சிறந்த கணனிக்கல்வியைப் பெறுவதன் மூலம் எவராலும் நல்ல

இவ்வாறு வளர்ச்சியுற்ற நிறுவனம் மேன்மேலும் வளர்ச்சியுற்று
வாழ்த்துக்கள்.


பரி

# சான்றிதழ் வழங்கும் வைபவம்

# WARD CEREMONY

# SS MANAGEMENT STUDIES

# 01/02



## அன்புச் சகோதரங்களே!



கணனிசார்ந்த தகவல் தொழில்நுட்பம் இன்றைய வளர்ச்சிப் போக்கில் அபரிமிதமான தாக்கத்தை ஏற்படுத்தும் காலகட்டத்தில், இத்தொழில்நுட்ப அறிவினை எமது மண்ணில் போர்க்கால சூழலிலும் அறிமுகப்படுத்தி பயிற்றுவித்தது சாதனையே. பல்கலைக்கழகக் கல்வி 1% மட்டும் என்று மட்டுப்படுத்தப்பட்ட சமூகப்பின்னணியில் IBMS நிறுவனத்தின் பணி விதந்துரைக்கப்பட வேண்டியதே. நம்பிக்கையின் கதிர் கீற்றுக்கள் எம் மக்களின் மனதில் தவழும் இவ்வேளையில் வரலாற்று சிறப்புமிக்க தகவல் தொழில்நுட்பத்தினை மக்கள்மயமாக்கும் இப்பணி பரந்து செயலூக்கம் பெற எனது ஆசீரும் வாழ்த்துகளும்.

இறைபணியில் இணையும்
அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ்.ஆயர்.

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி!



யாழ்ப்பாணம் IBMS நிறுவனம் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியையொட்டி வெளியிடவிருக்கும் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்தவருடம் இந்நிறுவனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக்கற்கைகள் வணிகபீடத்துடன் இணைந்து கணனிக்கண்காட்சி ஒன்றை நடத்தியது. இக்கண்காட்சி மாணவர்களுக்குப் பெரும் பயனுடையதாக அமைந்ததுடன் இந்நிறுவனத்தின் செயற்பாட்டின் தரத்தையும் உயர்த்தியது.

கடந்தகாலங்களில் யாழ்ப்பாணத்தில் நிலவிய போர்ச்சூழலாலும், கொழும்பிலிருந்து இங்கு கணனி எடுத்துவருவதில் ஏற்படும் சிரமங்கள் போன்றவற்றாலும், கணனிக் கல்வியில் யாழ்ப்பாணம் தென்னிலங்கை மாவட்டங்களுடன் ஒப்பீடுகையில் பின்தங்கி நிற்கின்றது எனலாம். எனினும் கடந்த ஓரிரு வருடங்களில் அரச, தனியார் துறைகளிலும், பல்கலைக் கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, கணனிக்கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள் போன்றவற்றிலும் கணனிப் பயன்பாட்டின் அதிகரிப்பையும், கணனிக்கல்வியின் வளர்ச்சியையும் காணமுடிகின்றது. கணனிக் கல்வியில் காணப் படும் இன்றைய இடைவெளியை நிரப்புவதற்குப் பல பிரிவினரும் பங்களிப்புச் செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். இன்றைய இளைஞர், யுவதிகளுக்குக் கணனிப் பயிற்சியளிப்பதன் மூலம் அவர்கள் வேலைவாய்ப்பு பெற வாய்ப்பளிப்பதுடன், தொழில்,வர்த்தக நிறுவனங்கள் தமது தொழிற்பாடுகளைக் கணனி மயமாக்கி மேலும் சிறப்புற வழிபிறக்கும்.

IBMS மேலும் சிறப்பாக வளர்ச்சியடைந்து இன்றைய மாணவர்களின் தேவைகளையும், தொழில் சார் நிறுவனங்களின் தேவைகளையும் நிறைவேற்றவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

உங்கள் பணி சிறக்க என் வாழ்த்துக்கள்.
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்

## காத்திரமான பங்களிப்பு!

ஐ.பீ.எம்.எஸ். என்று அழைக்கப்படும் கணனித் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் அதன் மற்றொரு தொகுதி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தை ஒரு விழாவாக இன்று நடத்துவது அறிந்து மகிழ்ச்சியடைகின்றோம்.

குடாநாட்டு இளைய தலைமுறை, கணனித் தொழில்நுட்பத்தில் பின்தங்கிவிடக்கூடாது என்ற ஒரேநோக்குடன் மாணவர்களைப் பயிற்றுவித்து, அத்துறையை வேகமாக வளர்த்தெடுத்ததில் ஐ.பீ.எம்.எஸ். நிறுவனத்தின் பங்கு, பணி காத்திரமானது, போற்றத்தக்கது. இந்நிறுவனம் மேலும் வளர்ந்து சிறப்புகள் பெற இறையாசியை வேண்டுகிறோம்.

நிர்வாகி
உதயன் நிறுவனம்.

## DIRECTOR (AD.), IBMS

o the special supplement pnblished to mark the occasion of the first Certificates

has within a period of three years, made rapid progress, increased its student
stitutes in Jaffna.
academic, who have entended their fullest cooperation to me and have worked

**Director(Ad.)**

## த்திலிருந்து......

(C/20354)

றுவனங்கள் தோன்றிவருகின்ற இக்காலகட்டத்தில், தோன்றி
து அறுகுபோல் வேரூன்றி மாணவ சமுதாயத்தின் ஒளிவிளக்காக
3ஆவது அகவையில் தனது முதலாவது சான்றிதழ் வழங்கும்
வாழ்த்துச் செய்தியனுப்புவதில் பெருமகிழ்வடைகிறேன். IBMS
ரீட்சையில் தோற்றி அதில் சிறந்த முதல்நிலைப் பெறுபேற்றைப்
னனி என்ற தோற்றப்பாட்டைத் தகர்த்து, என்னால் இலவசமாக
மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன் மூலம் கணனியில்
த்திலேயே கணனிப் பயிற்றுவிப்பாளராக உயர்த்த உதவியது.
பயிற்சிபெற்று, அதனால் யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்று பிரபல
ன்றைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது. இன்று என்னால் இத்தகைய
என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
ஏங்கித் தவிக்காமல் மாணவர்கள் இந்நிறுவனத்தில் இணைந்து
வராலும் நல்லதொரு உயர்ந்த நிலைக்கு வரமுடியும்.
வளர்ச்சியுற்று கணனியுலகிற்கு மேலும் சேவையாற்ற எனது

T.சதீஸ்கரன்,
பரீட்சைகள் கிளை, யாழ்.பல்கலைக்கழகம்.

இன்றைய உலகம் கணனியோடு பின்னிப்பிணைந்துவிட்டது. கணனி பயன்படுத்தப்படாத துறைகளே இல்லை என்றுகூறுமளவுக்கு கணனிக்கல்வி விருத்தியடைந்து வருகிறது. இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் IBMS நிறுவனத்தின் பணி போற்றுதற்குரியது. மேற்படி நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறியில் முதலாவது தொகுதி (First Batch) மாணவர்களுள் கணனிக் கல்வியைப் பெறும் அரியசந்தர்ப்பத்தை நான் பெற்றேன். கணனி என்றாலே என்னவென்று தெரியாத என்போன்ற சில மாணவர்கள் முதலாவது தொகுதியில் கல்வி கற்றோம். இந்நிறுவனத்தில் உள்ள விரிவுரையாளர்கள் எமக்களித்த விளக்கமும் பயிற்சியும் இன்று கணனி பற்றியதொரு திருப்திகரமான அறிவினைப் பெறக்கூடியதாக இருக்கின்றது.

குறிப்பிட்டளவு மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம் இன்று பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு கணனிக் கல்வியை வழங்கி, யாழ்ப்பாண நகரில் முன்னணி (கணனி) நிறுவனமாகத் திகழ்ந்து வருகின்றது. இதன் பணி எவ்வித இடையூறுகளும் இன்றித் தொடர இறைவனின் ஆசியோடு வாழ்த்துகின்றேன்.

*"வாழ்க உன் புகழ், வளர்க உன் பணி!"*

*முதல் தொகுதி மாணவி*
திருமதி சு.உதயராஜா,
விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

# வாழ்த்துகின்றோம்



"ஸ்கந்தவரோதயன்"

## உயர்திரு. செ.கு.சண்முகநாதன்

(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

அவர்கள்

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையை வளர்த்தெடுக்க அயராது உழைத்தமை மட்டுமன்றி, தனது காலப்பகுதியில் கூட்டுறவுத் திணைக்களத்திற்கென சொந்தமான கட்டடத்தை விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் கொள்வனவு செய்தும், கல்விகற்ற கல்லூரிக்கும் பெருமை சேர்த்து, பதவி உயர்வுடன் திருகோணமலை செல்வதையிட்டு மனமார வாழ்த்துவதுடன், கூட்டுறவுத் துறை மேன்மேலும் வளர உழைக்கவேண்டுமென வேண்டுகின்றேன்.

லயன் வி.எஸ்.சிவரத்தினம்

*இல.2 ஏ, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.* (97234) *டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம்.*

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



பனை அபிவிருத்திச் சபையின்
புதிய தலைவராக
நேற்று 18.01.2002இல்
உத்தியோகபூர்வமாக
கொழும்பில் பதவியேற்ற
உயர்திரு.
**பொன்னையா சிவபாதம்**
அவர்களையும்
இதற்கு
உறுதுணையாக இருந்த
இந்து கலாசார அமைச்சர்
கௌரவ **தி.மகேஸ்வரன்**
அவர்களையும்



மனமார வாழ்த்துவதோடு,
எமது அங்கத்தவர்களின் சமூக ,பொருளாதார
மேம்பாட்டிற்காகவும், ஊழியர்களின்
நலன்களுக்காகவும் அயராது அவர்களது சேவை
அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

**பணிப்பாளர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள்.**

**கரவெட்டி, பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி.** (C-20352)

# 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 07 - 1955



உதிர்வு 24 - 01 - 1988

திருமதி

## காயத்திரி ஆனந்தரமணி தர்மசோதி

*(விஞ்ஞான ஆசிரியை, ம/ காக்கையன்குளம் மகா வித்தியாலயம்)*

திதி: 19.01.2002 சனிக்கிழமை

அமரர் பண்டிதர் க. சடாஆனந்தர் *B.A.BOL.*-
அமரர் திருமதி அன்னம்மா ஆனந்தர்
ஆகியோரின் கனிஷ்ட புத்திரி.
நாம் வளர - வாழ இறையடியிலிருந்து
இறைஞ்சும் அம்மா!
*நாம் உங்கள் ஆத்மா சாந்தியடைய*
*இறைவனை இறைஞ்சுகின்றோம்.*

*"ஸ்ரீ சாலினி"*
*கே.கே.எஸ்.வீதி,*
*இணுவில்.*
T.P: 070-212367

மகன்: த.கோகுலன்,
மகள்மார்: த.கஸ்தூரி, த.புராதனி,
கணவர், சகோதரர், சகோதரி.
(97209)

# இன்று நடப்பவை

வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் நடைபெற்ற முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சைகள் யாவும் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து, தலையலங்காரம், துணிஅச்சிடல், உடையமைத்தல், வானொலி பேணல் ஆகிய கற்கைநெறிக்கான அறிமுறைப் பரீட்சை இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறும். தலையலங்காரம் கற்கைநெறியின் செயன்முறைப் பரீட்சை இன்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

அத்துடன் உடையமைத்தல், வானொலி பேணல் ஆகிய கற்கை நெறிகளுக்கான செயன்முறைப் பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9.00 மணிக்கு தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-118)

★ ★ ★

இன்று சனிக்கிழமை காலை ஒன்பது மணிதொடக்கம் 10.30 மணிவரை மல்லாகம் பாஸ்கரன் வீதியில் அமைந்துள்ள தெல்லிப்பழை பிரிவு கால்நடை வைத்திய பணிமனையில் வளர்ப்பு நாய்களுக்கான விசர்நாய் தடுப்பு மருந்து ஊசி போடப்படவிருக்கின்றது. (ஐ-152)

★ ★ ★

சண்டிலிப்பாய், சங்கானை பிரிவுகளைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கான ருபெல்லாத் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

மருத்துவபீட மாணவர்களால் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து நடத்தப்படும் இந்த மருத்துவ நிகழ்வில் குடும்பக்கட்டுப்பாடு தொடர்பான கருத்துரையும் வழங்கப்படும்.(ஐ-7)

★ ★ ★

கணனிக் கற்கை நிறுவனமான ஐ.பி.எம்.எஸ்ஸின் பட்டச் சான்றிதழ் மற்றும் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக கணனி விஞ்ஞானவியல் துறைத தலைவர் கலாநிதி எஸ்.மகேசன் பிரதமவிருந்தினராகவும்-

கௌரவவிருந்தினராக யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் திருமதி என்.தங்கராசாவும் கலந்துகொள்வர்.

இயக்குநர்உரை, பிரதமவிருந்தினர் உரை, கௌரவ விருந்தினர் உரை, சான்றிதழ் வழங்கும் நிகழ்வு ஆகியவற்றை தொடர்ந்து இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (ஐ-7)

★ ★ ★

இணுவில் லயன்ஸ் கழகத்தின் ஜனவரி மாதத்திற்கான சிறப்புக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு இணுவிலில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக பிராந்திய இணைப்பாளர் லயன் எஸ்.எஸ்.தங்கராசாவும், கௌரவ விருந்தினராக பிராந்தியத் தலைவா லயன் ஆர்.நடராசாவும் கலந்து கொள்வர். (ஐ-9)

## யோகர் சுவாமி மகளிர் நிலைய ஆண்டு விழா

யோகர் சுவாமி மகளிர் நிலைய ஆண்டுவிழா கடந்த தைப்பொங்கல் தினத்தன்று புலோலி தெற்கில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

யோகர் சுவாமி மகளிர் நிலைய சுவாமியம்மா சிவகுரு முருகுப்பிள்ளை, யோகர் சுவாமிகளின் தவநிலை பற்றி அடியார்களுக்கு விவரமாகக் கூறினார்.

விழாவில் திருமதி யோகராஜாவின் பக்திப் பாடல்களும் பஜனைப் பாடல்களும் சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெற்றன. (க)

## பாம்பு தீண்டி பெண் மரணம்

நச்சுப் பாம்பினால் கடியுண்ட குடும்பப் பெண் ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துவரப்படும் வழியில் உயிரிழந்துள்ளார்.

மண்டைதீவு ஆறாம் வட்டாரத்தைச் சேர்ந்த வினாகேந்திரன் கோணேஸ்வரி (வயது-30) என்ற பெண்மணியே கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பாம்புக்கடிக்கு இலக்கானார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (க-6)

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 18 - 03 - 1936



மறைவு 22 - 01 - 1999

## திருமதி சரஸ்வதி திருநாவுக்கரசு

திதி:19.01.2002 சனிக்கிழமை (சஷ்டி)

அடிசிற்கினியாளே அன்புடைய மாதே
பதி சொற்றவறாத பாவாய்- அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழுந்த பேதையே போதியே
என் தூங்கு மென் கண் ணீரா!

பிரிவால் துயருறும்:
கணவர், மருமகன், மகள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

நிரந்தர முகவரி:
*இல.1, திருமகள் வீதி*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
(97217)

தற்காலிக முகவரி:
*3/1, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி.*
*கச்சேரி கிழக்கு, யாழ்ப்பாணம்.*

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1964 - 05 - 26



மறைவு 2001 - 12 - 21

திருமதி

## மோகனதாஸ் உமாதேவி

*(யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை, ஆசிரியை)*

எமது வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
அன்புத் தீபமாய் இருந்து தன்னை
உருக்கி எமக்கு ஒளியூட்டிய எமது
உயிரினும் மேலான அன்புத் தெய்வமே
ஆயிரம் உறவுகள் மலர்ந்தாலும்
உங்களோடு எமக்கு ஏற்பட்ட உறவு
மீண்டும் மாறுமா தேவியே.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

அன்னாரின் மரணச் செய்திகேட்டு ஓடோடிவந்து எம் துயரில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

*நாளை (20. 01. 2002) ஞாயிற்றுக்கிழமை* நடைபெறுகின்ற அன்னாரின் அந்தியேட்டிக் கிரியையிலும், மதியபோசனத்திலும் ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள், வடமராட்சி கல்விப் பணிப்பாளர், கல்வி வலய அலுவலர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சுபத்திரை *(தாயார்)*

*சிவபுர வீதி,*
*வல்வெட்டித்துறை.*
(97252)

# முதலாவது ஆண்டு நினைவுப் பூக்கள்

அன்னை மடியில் 1924 - 03 - 30



மண்ணில் மடியில் 2001 - 01 - 30

## அமரர் சந்திரசேகரம் கனகசபை

*(ஓய்வுபெற்ற புகையிரத இயக்குநர்)*

திதி: 19.01.2002

நீங்கள் காட்டிய வழியினில் -என்றும்
உங்கள் பாதச் சுவடுகளைப் பின்பற்றி
அன்றும் உங்களுடன் ...
இன்றும் உங்கள் நினைவுடன்...
என்றும் உங்கள் நிழலுடன்...

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!*

*பிரசாந்தி நிலையம்,*
*ஆத்தியடி, பருத்தித்துறை.*
(97061)

-குடும்பத்தினர்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

9 ஸ்ரீ 0457 MORRIS OXFORD CAR விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: க.மகேஸ வரன், கிறிஸ்தவ கல்லூரி ஒழுங்கை, கோப்பாய். (97145)

நல்லின ஜேர்மன் செப்பர் அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.பாபு, பழைய தபால்கந்தோர் அருகில், சங்கானை. (97220)

தூய நல்லின சுத்த வெள்ளை JAPANESE SPITZ ஆண் நாய்க் குட்டிகள் அத்துடன் நல்லின பால் ஆடுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: "ஈஸ்வரி வாசா", இல.4, இணுவில் வீதி, மானிப்பாய். (97221)

பழைய ஓர் அங்குல எஸ்லோன் குழாய்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.T.செல்வரத்தினம், "ராஜேஸ் இல்லம்", சுதுமலை வடக்கு, மானிப்பாய். T.P.No.3596. (97230)

நொக்கிய காண்ட் செற் ரெலிபோன், அடையாள அட்டைக்கவர், லமினேற்றிங் மெசின் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கொக்குவில் சந்தி. T.P.2961, 3200. (97231)

## காணி விற்பனைக்கு

நீராவியடியில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (பிரதான வீதி முகப்பு) தொடர்புகளுக்கு: தொலைபேசி: 2409, 2909, 2315. (97179)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (97106)

இறைச்சிக்கோழி (Broiler) 1Kg - 135/- தினமும் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.94, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு (சட்டநாதர் சிவன் கோயிலுக்கும் கல்வியங்காட்டுச் சந்தைக்கும் இடையில்) (97206)

## ஒரு காதலின் கதை

அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் 'ஒரு காதலின் கதை' நாவலின் விமர்சனம் ஒரு கொழும்புப் பத்திரிகையின் இந்தவார மலரில் மலர்ந்துள்ளது. அதை வாசித்து நாவலின் தரத்தை அறிந்து வாங்குங்கள். (97215)

## வணிகக் கல்வியும் கணக்கீடும்

தரம் 11இற்குரிய புதிய பாடத் திட்டத்துக்கு அமைவான வணிகக் கல்வியும் கணக்கீடும் நூல் விற்பனையாகின்றது. ஆசிரியர்: இ.இரகுநாதன் B.B.A. Dip. in Ed. (97020)

## இலகு திருமண சேவை

1976 கேட்டை, செவ்வாய் - 1, B.Sc. Computer, படித்த அழகிய மணப்பெண்ணுக்கு பட்டதாரி தரத்தில் வெளிநாட்டு மணமகன் தேவை. கொழும்பு வீடு, பணம் உண்டு. துரை விமலா நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (97261)

## பலாபலன்கள்

ஜாதகம், கைரேகை, எண் இன்னும் பல சிறப்பம்ச விதிகளுடன் சோதிட ரீதியில் 40 வருடகால அனுபவத்துடன் மிகத் துல்லியமாகப் பலன்கள் கூறப்படும். தொடர்பு: அகில இலங்கைபிரபல சோதிடர் கைரேகை ஞானி N.S.நித்தி அவர்கள் காளி கோயிலடி, ஸ்ரேசன் றோட், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். (97257)

## தவறிவிட்டது

86 ஸ்ரீ 8500 என்னும் இலக்கமுடைய எக்கணமிக்பவர் - 90 மோட்டார் சைக்கிள் புத்தகம், TAX, TRANSFER FORM என்பன மாகியம்பதி சந்திக்கும் அளவெட்டிக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ச.பாலசுப்பிரமணியம் அஜந்தன், அளவெட்டி தெற்கு என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (97226)

---

# பதவி வெற்றிடம்

## யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

இச்சங்கத்தில் கீழே குறிப்பிடப்படும் பதவிக்கு தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி:- காவலாளி

கல்வித் தகைமைகள்:- ஆகக்குறைந்தது 8ஆம் வகுப்பு.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 25-01-2002 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு சகல தகைமைச் சான்றிதழ், நற்சாட்சிச் சான்றிதழ்களுடன் பணிமனைக்குச் சமுகம்தரவும்.

குறிப்பு:யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

215, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (97227)


- பொது முகாமையாளர்.

---

# பிறந்த தினமும் பிரிந்த தினமும்



1896 - 01 - 
1975 - 12 - 13



1910 - 08 - 01
1942 - 01 - 30

**Dr.விசுவநாதர் சின்னையா**
(நிலப்பிரபு)
(குளுவான் மலேசியா)

அன்னையாய் அறுசுவை
ஊட்டி
தந்தையாய் பொருள்
ஈட்டி
நல்ஆசானாய் அறிவு
புகட்டி
எங்களை அறநெறியில்
வாழ வழிகாட்டிய ஐயா
உங்களுக்கு எவ்விதம்
நன்றி கூறுவது?

**திருமதி**
**வள்ளியம்மை சின்னையா**
(குளுவான் மலேசியா)

அம்மாவின் அன்பை
அரவணைப்பை அறிய
முன் எம்மைவிட்டு
மறைந்துவிட்டீர்
உங்கள் ஆத்ம சாந்திக்கு
பிரார்த்திக்கின்றோம்.

பானாவெட்டி,
தொல்புரம். (97260)

பாசத்தின் சுழியில் தவிக்கும்
மகள்

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

வரணியில் மலர்வு 22 - 07 - 1959



வவுனியாவில் மறைவு 30 - 01 - 2001

அமரர்

## வல்லிபுரம் சிவானந்தன் (சிறி)

- வரணியூர் சிவா -

திதி: ஷஷ்டி - 19-01-2002

நீங்காத நினைவாக...............

பாங்காக எமை வளர்த்த பாசச்சுடரே! டடாவே!
தாங்காது நிதம் கலங்கும் மம்மியை எப்படித் தேற்றுவோம் நாம்?
ஏங்கியே தவிக்க விட்டு எங்கு சென்றீரையா?
தாங்காத துயரத்தால் நடைப் பிணமானோம்.
பூங்கா போல் அமையும் எம் வாழ்வு என நினைத்தோம்!
நீங்காத துயர் தந்து எமை விட்டுச் சென்றீரே! டடா!
நீங்கள் இல்லா வாழ்வு என்ன வாழ்வு தான் எமக்கு – என்றும்
நீங்காத நினைவாக எம் நெஞ்சத்தில் இருக்கின்றீர்!

தேனான பாடல் தந்து பாரினை மயக்கினீரே! நாம்
தேம்பியே அழவைத்து எங்கு சென்றீரோ?
வளமாக எமை வாழ வைத்த பெருந்தகையே!
குளமாகக் கண்ணீர் பெருக வைத்துச் சென்றதெங்கே?
"மனம் தளராது என் குடும்பத்தைக் காக்க வேண்டும்" – என்று
தாங்கள் கூறுவது போல் நிதம் நிதம் உணர்வு
தாங்காத துயரத்தால் தவிக்கும் எம் உள்ளத்தில்
நீங்காத நினைவாக நிலை பெற்று விட்டீரே!

தங்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி: சுசீலா சிவானந்தன்,
மகன்: சிவானந்தன் ரனீஸ்,
மகள்: சிவானந்தன் ஷமீனா,
சகலன்: க.இரவீந்திரன்,
மைத்துனி: இ.விமலா,
மருமகன்: இ.சஞ்ஜீவ்.

நிரந்தர முகவரி:
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம். (97255)

---

# UNIVERSITY OF JAFFNA
# FACULTY OF AGRICULTURE

**ADMISSION OF PUBLIC OFFICERS FOR DEGREE PROGRAMME IN B.Sc. AGRICULTURE (2002/2003)**

Applications will be entertained by the Dean, Faculty of Agriculture, University of Jaffna for Admission of Public Officers for Degree Programme to follow B.Sc. Agriculture as internal students for the Academic Year 2002/2003.

***The applicant should have the following qualifications:-***

1. Atleast 3 passes in the following subjects, in the G.C.E.(A/L) Examination at one sitting with an aggregate of not less than 180 marks.
   (a) Botany
   (b) Zoology
   (c) Chemistry
   (d) Physics
   (e) Agriculture

   OR

   Any other qualification, as may be approved by the Faculty Board and the Senate.

   AND

2. Diploma in Agriculture (Course duration not less than 2 years) obtained from any recognized institution.
3. Minimum of 5 years experience in a capacity of not less than middle level Technical, Officer Grade in the field of Agriculture after obtaining Diploma Course.

***Age:*** Candidate should be less than 45 years of age at the time of closing date of applications.

Application forms may be obtained from the Asst. Registrar, Examination & Admission Branch, University of Jaffna, on a payment of Rs.50/= each at the Shroff Counter or People's Bank, University of Jaffna.

Request for application by post should be accompanied by postal order or money order for Rs.50/= drawn in favour of the Bursar, University of Jaffna, Thirunelvely, and a self addressed stamped envelope (for Rs.3.50) not less than 9" X 4" size.

***Date of closing is 08-03-2002.***

Application should be forwarded through the relevant Heads of Department, Selected candidates will be called to sit for a written test and an Oral Examination, No application will be entertained after the closing date of applications.

**REGISTRAR** (C/20356) **09-01-2002**

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில்
தாதிய உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**செல்வி விஜிதா சுப்பிரமணியம்**
அவர்களின் அன்புத் தந்தையார்.

## சீனிவாசகம் சுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

(97263)

தாதிய உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கம்,
யாழ்.போதனா வைத்தியசாலை.

---

# மரண அறிவித்தல்

## திருமதி பெர்னதேத் செபஸ்தியாம்பிள்ளை

(சில்லாலை)

சில்லாலையைச் சேர்ந்த திருமதி பெர்னதேத் செபஸ்தியாம்பிள்ளை நேற்று (18.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் நவறாஜா (பொறியியலாளர், அமெரிக்கா), திருமதிகள் ராஜினி (கனடா), றோகினி, றஞ்சினி, சறோஜினி (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்புத் தாயாரும் வதனி (அமெரிக்கா), லெனாட் (கனடா) காலஞ்சென்ற M.A.எட்வேட் (உதவிப் பொறியியலாளர், காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்) மற்றும் இராசசிங்கம், லக்ஷ்மன் (ஆஸ்திரேலியா), ஆகியோரின் அன்பு மாமியும் ஷிவந்தி, சஞ்சீவ், சஜீவ், றேகன், ரஜீவ் (புனிதஹென்றியரசர் கல்லூரி மாணவன்), ஸ்ரெவனி, மெலனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.01.2002) சனிக்கிழமை பி.ப.300 மணியளவில் பொந்திலேன், பண்டத்தரிப்பில் உள்ள தற்காலிக இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்தில் திருப்பலிப் பூசை நடத்தப்பட்ட பின்னர் சில்லாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொந்திலேன்,
பண்டத்தரிப்பு. (97258)

தகவல்:
றோகினி எட்வேட் (மகள்)

## உயர்வினைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. வே. தி. செல்வரத்தினம்

அவர்கள் வடமராட்சி வலய பிரதிக் கல்விப்பணிப் பாளராக இருந்து கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரது பணி மேன் மேலும் சிறப்புறவும் நன்கு விரிவுபடவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.
யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம். (C/20363)

## உவகை பொங்கும் வாழ்த்துக்கள்!



யாழ்.மாநகர சபையின்
புதிய முதல்வராகப் பதவியேற்றுள்ள
மாண்புமிகு

### செல்லன் கந்தையன்

அவர்களை வரவேற்று, பாராட்டி, வாழ்த்தி உவகை அடைகிறோம்.
அவரது சேவை வெற்றிகரமாக முன்னேற இறையருளை வேண்டுகிறோம்.

களஞ்சியப் பொறுப்பாளர்கள், கொள்வனவு உத்தியோகத்தர், களஞ்சியப் பணியாளர்கள்.
(97279)

## யாழ்.மாவட்ட கரபந்தாட்டச் சங்க பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை (2002-01-20) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். கூட்டத்துக்கு அழைக்கப்பட்ட கழகங்களின் இரு பிரதிநிதிகள் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கி.மனோகரன்
செயலாளர்.
(97276)

## NEW SCIENCE COLLEGE

**JAFFNA**

**2004 A/L**

☆ பௌதிகவியல் ☆

திரு. M.கருணாநிதி *B.Sc (special)*

ஆரம்பம்:- நாளை (20.01.2002) ஞாயிறு பி.ப. 2.00 மணி
குறிப்பு :- நேரம்பற்றிய இறுதிமுடிவு வகுப்பில் தீர்மானிக்கப்படும்.
(97259)

## யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி 150ஆவது ஆண்டு நிறைவு சபை

### சுற்றுப்போட்டிகள்

பாடசாலை/கழகங்களுக்கிடையிலான சுற்றுப்போட்டிகளுக்கான விண்ணப்பதிகதி எதிர்வரும் 05.02.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது. கழகங்களுக்கிடையிலான கூடைப்பந்தாட்டம் (பெண்கள்) சேர்க்கப்பட்டுள்ளது.
விவரங்களுக்கு அதிபருடன் தொடர்புகொள்ளவும்.

S.K.தங்கவடிவேல்
*செயலாளர்.*
(97233)

## மதுபானச்சாலை திறப்பு விழா

அன்புடையீர்!

*யாழ்.பெரியகடை மதுபானச்சாலை இல.1*

மீண்டும் 120,கே.கே.எஸ். வீதியில் இன்று (19-01-2002) சனிக்கிழமை காலை 6 மணிக்கும் 8.30 மணிக்குமிடையில் வரும் சுபநேரத்தில் திறந்துவைக்கப்படுகின்றது என்பதை ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் மதுப்பிரியர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

*67, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (97256)
நியூட்டன்
மதுபான ஸ்தாபனத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 20-09-1974 உதிர்வு 17-01-2002

### செல்வன் தம்பிராசா திகழொளிபவன் B.A.

(ஆசிரியர்)

அன்பின் ஒளி விளக்கு அணைந்து விட்டதே! என் செய்வோம்?
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரான்பற்று,*
*பண்டத்தரிப்பு.* (97287)
- குடும்பத்தினர்.

## மருதமரத்துக்கு விசமிகள் தீவைப்பு

புன்னாலைக்கட்டுவன்,ஜன.19
ஏழாலை பெரியதம்பிரான் ஆலயத்துக்கு அருகே உள்ள நூற்றாண்டு பழமைவாய்ந்த பாரிய மருதமரத்துக்கு விசமிகள் தீ வைத்துள்ளனர். கடந்த 16ஆம் திகதி அதிகாலை முதல் அந்த மரம் எரிந்து புகைந்தபடி உள்ளது.
தீயை அணைக்கப் பொதுமக்கள் முயன்றனர். நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலம் நீரைப் பாய்ச்சி தீயை அணைக்க எடுக்கப்பட்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை. (ஐ-133)

## ஆஸ்பத்திரியில் தவறவிட்ட அ.அட்டைகள்

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்துள் தவறவிடப்பட்ட 4 போன் அடையாள அட்டைகள் கண்டு எடுக்கப்பட்டு வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
தவறவிடப்பட்ட அடையாள அட்டைகளுக்குரியவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

- ★ இராசையா சின்னத்தங்கம் - 298211076X
- ★ சுப்பையா கமலாதேவி - 566511509V
- ★ சுந்தரம் ஆழ்வான் - 451852140V
- ★ இராசன் சுமதி - 735473476V

இந்த அடையாள அட்டைகளுக்கு உரியோர் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-6)

## திருமலையில் பரிசில் வழங்கும் நிகழ்வு

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அண்மையில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி மற்றும் நாட்டுக்கூத்துப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று திருகோணமலையில் நடைபெறவுள்ளது.
இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறுகின்ற தமிழ் இலக்கிய பரிசளிப்பு விழாவில் வைத்தே இப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.
யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து போட்டியிட்டு வெற்றியீட்டிய 6 பாடசாலைகளின் மாணவர்களுக்கான பரிசில்களும் அவர்களின் பிரதிநிதிகளால் இன்று கையேற்கப்படும்.
நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறஇருந்த இந்த நிகழ்வு இன்று நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (ஐ-10)

## கட்டுத்துவக்கு வெடித்து படுகாயம்

விறகு எடுத்துவரச் சென்றவர் பன்றிக்கு கட்டப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்துப் படுகாயமடைந்தார். இச்சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை கற்கோவளம் பகுதியில் இடம்பெற்றது.
கற்கோவளம் புனித நகரைச் சேர்ந்த சின்னையா லோகநாதன் (வயது34) என்பவரே படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

### கணிதத்தில் சிறந்த பெறுபேறு அடைய வேண்டுமா?

PERSONAL CLASSES — MATHS

கணிதம் கற்பிப்பதில் 40 வருடங்களுக்கு மேல் அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் மிகக் குறுகிய காலத்தில் சிறந்த பெறுபேறுகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டு அடிப்படை அறிவிலிருந்து கற்பிக்கப்படும்.
O/L.GRADE
10,9,8,7,6
BRIGTIN ACADEMY
8,பிள்ளச்சஸ் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
*மாணவரின் வசதிக்கேற்ப நேரம் ஒதுக்கப்படும்.* (97280)

### சிறீஸ்ரான் சென்ரர்

நெல்லியடி.

**ENGLISH CLASS**

பிரிவு III (25)

புதிய பிரிவு (18.01.2002)
பிற்பகல் 3.00 மணிக்கு
ஆரம்பமாகிவிட்டது.

*ஒயு.ச.சட்டகோபன்* (97262)

## வாழ்த்துகின்றோம்

யாழ்.மாவட்டத்தின் கூட்டுறவின் வரலாற்றுப் பெருமையை நிலைநிறுத்தி, கூட்டுறவின் சிகரமாக நிமிர்ந்து நிற்கும்

### கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கம் மண்டபம்

புனரமைக்கப்பட்டு இன்று (19-01-2002) சனிக்கிழமை திறப்புவிழாக் காணும் நிகழ்வு எம்மை பெருமிதம் அடையச்செய்கின்றது.
இம்மண்டபத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் பாராட்டுவதோடு, நவீன தொழில் நுட்ப வசதிகள் நிறைந்த சிறந்த மண்டபமாக மிளிர, தொடர்ந்தும் தொடர்புடைய அனைவரதும் ஒத்துழைப்புகள் தொடர வேண்டும்.
மீண்டும் இப்பிரதேச மக்களின் கலை, கலாசார, சமூகமேம்பாட்டு நிகழ்வுகள் ஆயிரமாயிரம் கண்டு பல்லாண்டுகள் இம்மண்டபத்தின் பெருமைகள் நிலைக்க இறையருள் வேண்டி மனமார வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை.
(97270)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.

### செ.கு.சண்முகநாதன்

(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த காலத்தில் கூ.அ.உ. ஆணையாளர் பதவியேற்று கூட்டுறவு அமைப்புகளுக்கு புத்துயிர்கொடுத்தும் புதிய கூட்டுறவு அமைப்புகள் பலவற்றை உருவாக்கியும் கூட்டுறவு அமைப்புக்கென ஒரு வங்கியை அமைத்தும் கூட்டுறவுச் சங்கங்களின் நிதியை மேம்படுத்தியமைக்காகவும் கூட்டுறவுப் பணியாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியமைக்காகவும் அவர்தம் சேவையைப் பாராட்டுவதோடும் குறிப்பாக எமது சங்கப் பணியாளர்களின் தென்மராட்சி களவு இழப்பீடுகளுக்கு உரிய அனுமதியை தலைமைக் கந்தோரிலிருந்து பெறுவதற்கு வழிசமைத்தமைக்காவும் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு.செ.கு.சண்முகநாதன் அவர்கள் பதவி உயர்வு பெற்று திருகோணமலை தலைமை அலுவலகத்துக்கு சிரேஷ்ட உதவி ஆணையாளராகச் செல்வதையிட்டு மகிழ்ச்சியடைவதுடன், அவர் எமது பிரதேசத்தின் மைந்தன் என்ற வகையிலும் அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.* (C/20360)
தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள், கிளைக்குழு உறுப்பினர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 14 - 04 - 1947
உதிர்வு 17 - 01 - 2002

மண்கும்பானைச் சேர்ந்த

அமரர்

### ஐயம்பிள்ளை நடராசா

*(உரிமையாளர், மைதிலி ஜுவல்லர்ஸ், மதனா ஜுவல்லர்ஸ்)*

அவர்கள் 17-01-2002இல் காலமான செய்திகேட்டு நாம் ஆழ்ந்த கவலையடைவதுடன், அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாரங்கன் நகை மாடம்
அன் சென்ரர்,
அருள் முருகன் நகையகம்.
சாரங்கா நகை மாடம்
177/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/20361)

| | | | |
|---|---|---|---|
| சந். செவ். | | சனி | வியா. ராகு |
| ல | இராசிச் சக்கரம் | | |
| சூ. புத. வெ. | | | |
| கேது | | | |

**மாற்றம்:-**

20.01.2002இல் ரேவதி நட்சத்திரம் - சந்திரன் மீன ராசியில் நிற்கும்.

22.01.2002இல் தனு இராசியில் புதன் வக்கிரமாகிவரும்.

**27.01.2002இல் இராகு இடபராசிக்கும், கேது விருட்சிக இராசிக்கும் மாறும்பொழுது அரசியல் அரங்கில் பதற்றநிலைகள், கருத்துவேற்றுமைகள் உருவாகும். தொடர்ந்து பேச்சுக்கள் தொடரும். கொடுக்கவேண்டியவருக்கு கொடுக்க மனம் இல்லை. எடுக்க நினைப்பவருக்கு ஏமாற்றத்தைத் தாங்கமுடியவில்லை என்ற நிலை ஏற்படும். இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான், ஈராக், பலஸ்தீனம், இஸ்ரேல் போன்ற நாடுகளில் தொடர் நிகழ்ச்சியாக யுத்த நடவடிக்கைகள் அதி கரிக்க இடம் உண்டு. மேற்கு நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளால் மத்தியகிழக்கு, கிழக்கு நாடுகளல் பல மாற்றங்கள் ஏற்படும். பசுபிக், இந்து சமுத்திரப் பிராந்திய நாடுகளில் அடிக்கடி செயற்கையான பதற்ற நிலையும், இயற்கையால் அழிவுகளும் தொடரும் எனக் கிரகநிலைகள் காட்டுகின்றன.**



# இந்த வார இராசி பலன்

## 20.01.2002 ~ 26.01.2002

மகாதேவா ஜோதிடம்

### மேடம்

ஆடிய மனிதர்கள் ஒருநாள் சாபத்துடன் அடங்கி விடுவார்கள். தேடியதை வந்தவர்கள், நின்றவர்கள் பகிர்ந்துகொள்வார்கள். பணம் என்ன! பந்தம் என்ன! எல்லாம் ஒரு மாயம் என எண்ணுகிறீர்களா? சொத்தில் ஒரு போட்டி, மனக்குழப்பம், தொழில் ஸ்தானத்தில் வீண் பழிச்சொற்கள், சகோதர வழி அல்லது எதிர்பாலாரின் சகோதர வழியினருக்கு மாற்றங்கள் ஏற்படல் என்பன நிகழும். தோல், வயிறு, மூலம் போன்ற இடங்களில் வருத்தம். உஷ்ண பீடைகள் கொடுக்கும். மருந்துத்துறை, அரசியற்றுறை, நிர்வாகத்துறை போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள். பிரயாணங்களைத் தவிர்த்தல் நன்று.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

### இடபம்

போராடியவர் தோல்வி கண்டாலும் அடுத்த வெற்றி அவருக்குக் கிடைக்கும். தொழில் ஸ்தானத்தில் இந்த நிலை உங்களுக்கு ஏற்பட இடமுண்டு. அரச உதவிகள் கிடைத்தல், குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிதல். வீடுவாகன யோகம் ஏற்படும். சத்துருக்கள் பின்வாங்குதல். தெய்வ வழிபாடு, பெரியவர்கள் உதவி, பொருளால் வேதனை, பிரிவுகள் என்பன நடக்கும். களைப்பு, சலிப்பு, தொண்டை வருத்தம் என்பன வரும் பலன்கள் காணப்படுகின்றது. தூரதேசச் செய்திகள் வரும். நீதித்துறை, குருத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை போன்ற துறையினர்கள் உதவிசெய்வார்கள். இத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

### மிதுனம்

பதவிகள் வரும்பொழுது எப்பொழுதும் உங்களைச் சுற்றி ஒரு கூட்டம் சுழலும். பதவிவிலக கூட்டமும் விலகும். இதேபோன்று தொழில் ஸ்தானத்தில் செயற்பாடுகள் இருக்கும். பழமையில் விருப்பம் ஏற்படும். அரசரால், அரசியல் கட்சியினரால் நன்மையடைவர். வேகமான செயற்பாடுகளால் இழப்பு ஏற்படலாம். கைகால் உளைவு, முதுகு உளைவு, மலச்சிக்கல், வாய்வுத் தொல்லை என்பன ஏற்படும். கடற்றுறை, தரகு, போக்குவரத்து, புடைவை, ஹோட்டல் போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

### கடகம்

சகோதரர்களின் உதவிகள் கிடைக்கும். சிலருக்குப் பிற தேசம் செல்ல வேண்டிய சூழ்நிலைக்கு இடமுண்டு. தொழில் ஸ்தானத்தில் ஏனோதானோ என்ற நிலை ஏற்படும். உதவிக்கு வந்தவர் பின்வாங்குவார். பிரசர், வயிற்றுப் பொருமல், சலவருத்தம், கைகால் வீக்கம் என்பன வரும். தூரத்துச் செய்தி அல்லது உறவினர் வருகை ஏற்படும். சட்டத்துறை, வியாபாரத்துறை, பிரயாணத்துறை, கோயிற்றுறைகளைச் சேர்ந்தவர்களுக்கு பல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், சனி.*

### சிங்கம்

அவரவர் மனதில் எத்தனை புயல்கள் வீசுகின்றன? அநியாயங்களைக் கண்டு எல்லோராலும் அமைதியாக இருக்க முடியாது. தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள் உருவாகும். திட்டமிட்ட செயற்பாடுகளால் மாற்றங்கள் நிகழும். எதிர்ப்பாலார் உதவிகள் செய்வார்கள். செய்திகளால் மேலும் நன்மைகள் ஏற்படும். உடல் நிலைத் தாக்கம் நெஞ்சுநோ, உஷ்ண குளிர்ப்பீடைகள், கால் விறைப்பு என்பன கொடுக்கும். மருந்துத்துறை, வியாபாரத்துறை, குருத்துறை, கொம்பியூட்டர் போன்ற துறையினர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் மாறி மாறிக் கொடுக்கும் பலன்கள் காணப்படுகின்றன.

*அதிர்ஷ்ட நாள்: புதன், சனி.*

### கன்னி

இந்தக் கட்டையில் உயிரொட்டிக் கொண்டிருப்பது எதற்காக? யாருக்காக? என யோசிக்கிறீர்களா? தொழில் ஸ்தானத்தில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, அடிக்கடி கோபித்துக் கொள்ளல், சகோதரங்கள் சிறப்பு அடைவார்கள், இடாம்பீகச் செலவுகள் அதிகரிக்கும், தூரத்துச் செய்திகள் வரும். நண்பர்களால் பல உதவிகள் கிடைக்கும். நன்மைகள் ஏற்படும். இடுப்புவலி, கிருமித் தாக்கம், இரத்த வருத்தம், பிறசர் போன்ற வருத்தங்கள் வரப் பலனுண்டு. குருத்துறை, ஆலயத்துறை, சங்கீதம், கலை, இசைத் துறையினர்கள், வியாபாரத்துறை போன்றவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: புதன், சனி.*

### துலாம்

குற்றவாளிகள், கெடுதி செய்பவர்கள் எப்படியும் நிலைத்து நிற்க மாட்டார்கள். என்றோ ஒருநாள் வல்லவனிடம் வகையாக மாட்டிக்கொள்வார்கள். அப்பொழுது எல்லோரும் கைகொட்டிச் சிரிப்பார்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய திட்டங்கள், வரவேற்புகள் இருக்கும். தோல்கூட்டு, மூட்டு, நாரிநோ, நரம்பு சம்பந்தமான சுகவீனங்கள் கொடுக்கும். இடமாற்றங்களைத் தவிர்க்கவும், வாதப்பிடிப்பு, அடிக்கடி கோபம், உஷ்ணபீடைகள் என்பன ஏற்படும். விவசாயத்துறை, மருந்துத்துறை, இரசாயனத்துறை, குருத்துறை போன்ற துறையினர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, புதன், சனி.*

### விருச்சிகம்

தீவிரவாதிகள் மற்றவர்களுக்கு அழிவுகளைச் செய்து சுகம் காண்பார்கள். சட்டத்தினிடம் உடனே அகப்படாமல் தப்பிக்கொண்டாலும் தர்மதேவதை பின்தொடர்ந்து பழி தீர்த்துக் கொள்ளாமல் விட்டதாகச் சரித்திரம் இல்லை. தொழில் ஸ்தானத்தில் பல புதிய திட்டங்கள் உருவாகும். அடிக்கடி அழகுபடுத்தல், பிறருக்கு உதவுதல், வீடு, வாகன யோகம் என்பன கிடைக்கும். காற்பகுதியில் தாக்கம், இரத்த வருத்தம், சல நோய், நரம்பு, கண்நோ என்பன வர இடமுண்டு. மருந்துத்துறை, இரும்புத்துறை, குருத்துறை போன்ற துறையினர்கள் நன்மையடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, புதன், சனி.*

### தனுசு

நல்லவர்களை வல்லவராக்குவது அவரவர் செயல்திறன் என்பது நீங்கள் அறியாததல்ல. பாதிக்கப்பட்டவர்கள் மனம் நொந்து பயங்கரவாதிகளாகும் பொழுது பாதிப்பை ஏற்படுத்தாதோர் பஞ்சணையில் படுத்துவிட முடியுமா? தொழில் ஸ்தானத்தில் வாக்குக் கலகம். வீடு, வாகன சுகம் கொடுக்கும். இனஜனச் சிறப்பு. புதிய நண்பர்கள் வருவர். கால்பிடிப்பு நோ, மனப்போராட்டம், கோபப்படுதல், குடல் வருத்தங்கள், பித்த ரோகங்கள் என்பன வரும். நீதித்துறை, வியாபாரத்துறை, தோட்டத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்கள் முன்னேற்றம் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்: ஞாயிறு, புதன், சனி.*

### மகரம்

கெட்டவைகளை திரும்பத் திரும்ப செய்வதையோ, சொல்வதையோ எவர் கைக்கொண்டாலும் நிச்சயம் கெடுதி அவர்களுக்குத்தான். எதிரிகளைத் தூற்றுவதனால் இழப்புகள்தான் வரும். தொழில் ஸ்தானத்தில் அடிக்கடி மாற்றங்கள் கொடுக்கும். எதிர்ப்பாலாரினது எதிர்ப்புக்கள் ஏற்படும். கால் வருத்தம், மூட்டுவருத்தம், தலைவலி, உஷ்ண பீடைகள் கொடுக்கும். விவசாயத்துறை, வங்கித்துறை, பால் பண்ணைத்துறை, இசைத்துறை போன்ற துறையினர்களுக்கும் நன்மைகள், சிறப்புக்கள் கொடுக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

### கும்பம்

நம்பிக்கையை எந்த விலையைக் கொடுத்தும் வாங்கமுடியாது. தொழில் ஸ்தானத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். வருமானச் சிறப்பு ஏற்படும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். நண்பர்கள் வீண்பழி சுமத்துவார்கள். தொண்டை வரட்சி, கால் வீக்கம், நீர்வடிதல், பயப்பாடு என்பன வரும். இடமாற்றங்கள் ஏற்படும். அடிக்கடி மறதிகள் வர இடமுண்டு. குருத்துறை, பிரயாணத்துறை, வியாபாரத் துறை, சங்கீதத் துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*

### மீனம்

உடலால் சிலர் கெட்டுப்போகிறார்கள். மனத்தால் பலர் குட்டிச் சுவராகிப் போகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் மாற்றங்கள் ஏற்படும். வருமானங்கள் அதிகரிக்கும். தூர தேசச் செய்திகள் வரும். பிறருக்கு ஆலோசனை, குடும்பத்தில் மாற்றங்கள் வரும். எதிர்ப்பாலார்கள் உதவிகள் செய்வார்கள். சளித் தொல்லை பிறசர், உஷ்ணபீடை, பித்தக்கொதிப்பு என்பன வரப்பலன் உண்டு. சட்டத் துறை, பாதுகாப்புத்துறை, அரசியல் துறை, வியாபாரத்துறை, கடல்துறை போன்ற துறையினருக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்: சனி.*


# மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி

மானிப்பாயிலுள்ள அந்தச் சந்தியிலே ஆலமரம் இருந்த சுவடே தெரியாத காலத்திலும் அது ஆலடிச் சந்திதான்.... ஏன் இன்றும் கூடத்தான்....

அந்தச் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக சுமார் ஐம்பதடி நீள ஒழுங்கை.... அதன் முடிவிலே இருந்தது அந்தப் பலசரக்குக் கடை.... கடையின் பெயர் என்னவாக இருந்தாலும் மக்கள் அதற்குச் சூட்டியுள்ள பெயர் ஓடைக்கடை.... ஓடைக்குள் இருந்தாலும் அது ஒரு பிரபலமான பெரிய ஓடைக்கடை....

கடைக்குப் போகின்ற பாதையோரம் பனையோலை வேலியாலானது. அதிலே சிலர் தங்கள் சைக்கிள்களைச் சாத்துவதற்குக்கூடத் தயங்குவதில்லை. கடையின் முன் பக்க ஓரங்களிலே விளக்குமாறு, தும்புத்தடி, கயிற்றுக் கட்டுகள், கயிற்று முடிச்சுகள், சிரட்டைக் கரி, தவிடு – புண்ணாக்கு மூடைகள் என்பன இருக்கும். உள்ளே ஊழியர்கள் 'அச்சிடென' படாமல் எடுக்க முடியாத அளவுக்கு பல சரக்குகள் நிரம்பியிருக்கும். நிதான விலை – மோசடிகளில்லாத வியாபாரம் என்பதால் கடைக்கு முன் எந்நேரமும் கூட்டத்துக்குக் குறைவிருக்காது. கடையைக் கணபதிப்பிள்ளை, மருதலிங்கம் என்ற இரு சகோதரர்கள் கூட்டாக நடத்திவந்தார்கள். அவர்களிடம் முதலாளிகள் என்ற பெருமை, பகட்டு எதுவும் கிடையாது. கடைக்குள் வந்தால் சேட்டைக்கூடக் கழற்றிக் கொழுவிவிட்டுத்தான் வியாபாரத்தைக் கவனிப்பார்கள். ஒருவர் வீட்டுக்கு அல்லது வெளியே எங்காவது போயிருந்தால் மற்றவர் பட்டறையில் இருப்பார் அல்லது உதவியாளர்களுடன் கூட உதவிக்கு நின்று சாமான்கள் கட்டிக்கொண்டிருப்பார்.

அப்பொழுது நாங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த காலம். ஏதாவது கொப்பி, பென்சில் வாங்கவென்று இந்த



ஓடைக்கடைக்கும் போவதுண்டு. வீட்டிலும் சில சமயங்களில் பாடசாலை விட்டு வரும்போது இடையிலேயுள்ள ஓடைக்கடையிலே ஏதாவது வாங்கிவரும்படி பணமும் பையும் தந்திருப்பார்கள். பை என்றால் ஏதாவது 'யூனிபோம்' துணியில் தைத்த தலையணை உறையாகத்தான் இருக்கும். அதை மடித்துப் புத்தகக் கட்டுக்கு இடையே வைத்துக் கொண்டு போவோம். சைக்கிளில் போய்வருகின்ற காலத்திலும் இதே கதைதான். அப்பொழுதெல்லாம் இந்த சொப்பிங் பைகளோ நாகரிகமான பைகளோ கிடையாது. அப்படி இருந்தாலும் அவைகளை எங்களை நம்பித் தரமாட்டார்கள்.

ஓடைக் கடையில் எந்நேரமும் கூட்டமாகவேயிருக்கும். அதுவும் பாடசாலைகள் விடும் நேரங்களிலே கேட்கவே வேண்டியதில்லை. இருந்தாலும் அந்தக் கடை முதலாளிகள் மிகுந்த 'கண்ணோட்டம்' மிக்கவர்கள். எந்தவித 'டோக்கன்' முறையும் இல்லாமலே யார் முதலில் வந்தவர் யார் அதன்பின் வந்தவர் என்பதையெல்லாம் மனக்கணக்குப்போட்டு வைத்திருந்து அதன்படிதான் சிட்டை போட்டுப் பணம் வாங்குவார்கள். சாமான்கள் கொடுப்பதுவும் அதே ஒழுங்கில்தான் நடக்கும்.

இந்த ஓடைக்கடையை மட்டுமன்றி அதனை நடத்தி வந்த சகோதரர்களைப் பற்றியும் எல்லோரும் வியந்து பேசுவார்கள். அவர்கள் இருவரும் – அதுவும் திருமணமாகித் தனிக்குடித்தனம் சென்ற பின்னரும் எவ்வித பிச்சுப் பிடுங்கலுமில்லாமல் ஒற்றுமையாகக் கூட்டுவியாபாரம் செய்துவந்ததைப் பாராட்டிப் பேசுவார்கள்.

இன்னுமொரு விவரத்தை இந்த இடத்திலே சொல்லியாக வேண்டும். இவர்கள் தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களாக இருந்தவர்கள். அதிலும் மூத்தவரான கணபதிப்பிள்ளை கட்சிக்காக முன்னின்று உழைத்தவர்களில் ஒருவர். கட்சித் தலைவர்கள்மீது மிகுந்த மதிப்பும் வைத்திருந்தார்கள். சில காரணங்களால் நானும் இந்த ஓடைக்கடை வரலாற்றைத் தமிழரசுக் கட்சி காலம்வரையே சொல்லுகிறேன்.

அமிர்தலிங்கம் அவர்கள் கூட்டங்களிலே ஓர் உவமானம் சொல்லுவார். ஒற்றுமை என்றால் அது 'நான் தவிடு கொண்டு வருகிறேன். நீ அவல் கொண்டுவா. ஒன்றாகக் கலந்துவிட்டு ஊதிஊதிச் சாப்பிடுவோம்' என்பதுபோல இருக்கக்கூடாது என்று! இந்த இரண்டு சகோதரர்களில் எவரும் தங்கள் கூட்டு வியாபாரத்திலே கடைசிவரை அப்படி நடந்துகொள்ளவில்லை.

காலமாற்றத்தில் ஓடைக்குள் இருந்த கடை தெருவோரமாக முன்நோக்கிப் பெரிய கடையாக மறுசீரமைக்கப்பட்டபோதும் அந்தக்கடை என்னவோ ஓடைக்கடை என்றுதான் வழங்கிவந்தது. ஆலமரம் இல்லாதபோதும் ஆலடிச் சந்தி இருந்தது போல....

மேலும் சில ஆண்டுகளுக்குப் பின்னர் அங்கு இன்னொரு மாற்றமும் தெரியவந்தது. ஆரம்பத்திலே ஓடைக்கடை இருந்த இடத்துக்கு முன்னாலுள்ள கடைப்பகுதி தம்பியாருக்கும் அதற்கு வலப்பக்கமாகவுள்ள கடைப்பகுதி தமையனுக்குமெனப் பிரிவினை செய்யப்படுவது போலத் தெரிந்தது. அதுபற்றி கணபதிப்பிள்ளை அவர்களிடம் கேட்டேன் –

அதற்கு முன்னர் மானிப்பாயிலுள்ள இன்னொரு தொழிலதிபர் வீட்டிலே – அவர் இருக்கும்போதே அவரின் பிள்ளைகள் மத்தியிலே 'யாருக்கு எது' என்பதில் ஆரம்பித்த தகராறு ஆள்கடத்தல் – நீதிமன்றம் – வழக்குக் கணக்கு என்றெல்லாம் நடந்துகொண்டிருந்தது....

அதனை நினைவூட்டியவர் அப்படி எதுவும் தங்களுக்குள் நடக்காது – என்றாலும் தங்கள் பிள்ளைகள் இப்ப இல்லாவிட்டாலும் எதிர்காலத்தில் அப்படி நடந்துகொள்ளக் கூடாது என்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைதான் அது – என்றார். மலையகத் தமிழர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டபோது தந்தை செல்வா இப்படிச் சொன்னாராம்... "இன்று இந்தியத் தமிழர்களுக்கு நடப்பது நாளை இலங்கைத் தமிழர்களுக்கும் நடக்கலாம்...."

வேறொரு சமயம் கடைக்குள் சென்று கவனித்தேன். இரண்டு கடைகளுக்குமிடையே ஒரு குறுக்குச்சுவர். அதிலே ஓரிடத்தில் சன்னல் போன்ற இடைவெளி விடப்பட்டிருந்தது. அதன்மூலம் அவ்வப்போது முதலாளிகள் மட்டுமல்ல, ஊழியர்களும் நட்புரிமையுடன் உரையாடுவதையும் உறவாடுவதையும் காணமுடிந்தது. தொலைபேசிக் கருவியும் அந்த இடைவெளிச் சுவரில்தான் இருந்தது. அது இரண்டு கடைகளுக்கும் பொதுவாம்... அதாவது....

'மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி'

– சண் அங்கிள்

## முக்கிய அறிவித்தல்

455, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கிவரும் சிமிலீ குமார் பான்சி ஸ்ரோருடன் வியாபாரத் தொடர்புகளை இதுவரை மேற்கொண்டதன் மூலம் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் இம்மாதம் 31-01-2002ஆம் திகதி மேற்படி முகவரியில் எம்மால் சரிபார்க்கப்படும்.

எம்முடன் வியாபாரத் தொடர்பை இதுவரை மேற்கொண்டவர்கள் அன்றையதினம் எம்முடன் தொடர்புகொண்டு தங்களுடைய கொடுக்கல் வாங்கல்களைத் தயவுசெய்து சரிபார்த்துக்கொள்ளவும்.

*455, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.* அ.குமார் *(உரிமையாளர்)* (97253)



**வணிகப் பிரமுகர்களே!**

மேலும் மேலும் உங்கள் பெயர் விலாசங்களை 2002ஆம் ஆண்டுக்கான கலண்டர் மூலம் ஊர்ஜிதம் செய்யுங்கள்.

எங்களிடம் நம். ① வகைவகையான, வண்ணவண்ண றோல் கலண்டர்கள் விற்பனைக்கு வந்துவிட்டன. கலண்டர்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:

## சிவா நறுமணப் பூங்கா

T.P.2567. 288, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (97218)



இலங்கை வானொலி யாழ்.சேவையுடன்
ஈழநல்லூர் 'ராகம்ஸ்' இசைக்குழுவினர்
இணைந்து வழங்கும்,

## 'பொங்கிடும் ராகங்கள்'

*இடம்:* புத்தூர் யா/ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி
*காலம்:* நாளை (20.01.2002) ஞாயிறு பி.ப.2.30 மணி (புதிய நேரம்)
*நிகழ்ச்சி தொகுப்பு:*

1. கே.ஜே.சுரேஸ் ஆனந்த் (இலங்கை வானொலி)
2. ஜோக்கின் பெர்னாண்டோ (இலங்கை வானொலி)
3. சரனா நேயரஹீம் சஹீம் (இலங்கை வானொலி)
4. புதுவையூர் கே.எம்.ரஞ்சித் (ராகம்ஸ் இசைக்குழு)

(ரிக்கட்டுக்களை கல்லூரி வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்)
*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*விளம்பர அனுசரணை:*
சாரங்கா நகை மாடம்
*இல.177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.*
தொலைபேசி - 2480
(C/20344)



உ
இமையாணன் - துவாளி
### அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான நூதன வைரவமூர்த்தி
மகா கும்பாபிஷேக மணவாளக் கோலதின விஞ்ஞாபனம்

நிகழும் விஷு வருடம் தை மாதம் 07ஆம் நாள் நாளை (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி 50 நிமிடம் முதல் காலை 9 மணி 15 நிமிடம் வரையான சுபவேளையில் நடைபெறும்.

கர்மாரம்பம்: தை மாதம் 06ஆம் நாள் இன்று (19.01.2002) சனிக்கிழமை காலை 6.30 மணி
எண்ணெய்க்காப்பு: தை மாதம் 06ஆம் நாள் இன்று (19.01.2002) சனிக்கிழமை மு.ப.11.15 முதல் மாலை 3.00 மணிவரை
மகா கும்பாபிஷேக பிரதமகுரு:
சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.
(பிரதமகுரு, ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்.)
தேவஸ்தானகுரு: சிவஸ்ரீ தி.அப்பாத்துரைக் குருக்கள்
உபயகாரர்: சிவஸ்ரீ வே.பாலச்சந்திரக் குருக்கள்
(97251) -பரிபாலன சபை.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு.
### செ.கு.சண்முகநாதன்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகப் பதவியேற்ற காலத்தில் 24.09.1997 ஆம் ஆண்டு எமது யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தினை கூட்டுறவு அமைப்பில் பதிவுசெய்து, சங்கத்தின் வளர்ச்சிக்கு பல வழிகளிலும் உதவி புரிந்து, தற்போது பதவி உயர்வு பெற்று, திருகோணமலை தலைமை அலுவலகத்துக்கு சிரேஷ்ட ஆணையாளராகச் செல்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

தலைவர், பணிப்பாளர்கள்,
அங்கத்தவர்கள், பணியாளர்கள்,
யாழ்.மாவட்ட தனியார் பாரவூர்தி
உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து).

*215, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.* (97228)



We Serve
வட்டுக்கோட்டை,
மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகங்கள்
இணைந்து நடாத்தும்
## இலவச கண் பரிசோதனை முகாம்

*இடம்:* வட்டு. மத்திய கல்லூரி ஆரம்ப பாடசாலை
*காலம்:* நாளை (20.01.2002) ஞாயிறு காலை 9.00 மணி
*நடத்துபவர்:* லயன J.S.A FERNANDO M.J.F, சகோதரர்

இரத்த அழுத்தம், சலரோக நோயாளிகள் இனங்காணும் பரிசோதனையும் நடைபெறும்.

வட்டுக்கோட்டை, மானிப்பாய் பரிஷ்
லயன்ஸ் கழகங்கள்.
(97185)



## திருமண நல்வாழ்த்து

இன்று (19.01.2002) சனிக்கிழமை இல்லறமெனும் இன்ப வாழ்வில் இனிதே இணையும்

திரு. திருமதி சிவபாலசேகரன் - உமாரதி புதுமணத் தம்பதிகளை

இரு மனம் ஒரு மனதாய்
இணையும் நன்னாளாம் நல் திருமணம்
காணுகின்ற இந்நாளில்
நறுமணம் வீசிடும் மலர்களாய்
நாளும் புகழ் மணம் பரப்பி
ஒரு கணமும் பிரியாது என்றும்
ஒற்றுமையுடன் வாழ்ந்திடுவீர்
*என மனதார வாழ்த்துகின்றோம்.*

திட்டமிடற் கிளை,
பிரதேச செயலகம்,
கோப்பாய்.
(97265)



உ
சிவமயம்
## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தைத்திங்கள் 6ஆம் நாள் இன்று (19.01.2002) சனிக்கிழமை மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையுள்ள வளர்பிறை சஷ்டி திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய கடகலக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்,

எமது கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
ஜெயசீலன் (சீலன்)
அவர்களுக்கும்



எமது செல்வப் புத்திரி
திருநிறை செல்வி
கிருபாகினி (கிருபா)
அவர்களுக்கும்

தெய்வத்திருவருளை முன்னிட்டு மாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருக்கின்றனர்.
திருமணம் நடைபெறும் மண்டபம்:
*Classic Club, 28, Upper Tooting Road, Tooting Bec, London SW17.*
இந்தத் திருமண நிகழ்வை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகின்றோம்.

திருமதி சு.இராசரத்தினம்
*சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலி,*
*இலங்கை.*

திரு. திருமதி செல்லத்துரை
*பலாலி கிழக்கு, வசாவிளான்,*
*இலங்கை.*
(97254)





பயிர்ச்செய்கைப் பகுதிக்கான
ஒரு முழுமையான பொதி
சி.ஐ.சி. பயிர்ச்செய்கைத் தொழில்கள்

சி.ஐ.சி. உரம்
சி.ஐ.சி. உரம் விஷேசமாக உருவாக்கப்பட்ட
சமநிலையான தாவர போஷாக்கு
வளமாக்கிக் கலவைகளாகும்.

சி.ஐ.சி. விதைகள்
நவீன தொழில்நுட்பவியல் கலையை
உபயோகித்து உயர்ரக நெல் விதையும்
மற்றைய தாவர நடுகைப் பொருளும்.

சி.ஐ.சி. உயிரினத் தொழில்நுட்பப் பயிர்
ஏற்றுமதிக்கான உயர்தாவர நடுகைப் பொருளும்,
பூக்குமிழ்கள், பிறநாட்டுக்குரிய மரக்கறிகள்,
உள்நாட்டு விற்பனைக்கான இழை பண்பாட்டு
உருளைக்கிழங்கு முகிழ்கள், வாழைமரங்கள். .

சி.ஐ.சி. பயிர்ச்செய்கைக் கலந்தாலோசனை
பயிரிடுவோர்களுக்கான புத்திமதியும்
ஆலோசனைச் சேவைகளும்.

சி.ஐ.சி. பயிர் - தொழில்நுட்பவியல்
பல்கான்கள், பச்சிலைக்கூடங்கள்,
நுண்நீர்பாசன முறைமைகள் விற்பனை.



சி.ஐ.சி. பயிர்ச்செய்கைத் தொழில்கள்
தொழில்நுட்பத்தினால் முன்னேறுகின்றது.

தலைமைக் காரியாலயம்
205 1/1, டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு - 10
தொ.பே. இல: 688200, 688201, 688202, தொலைநகல் : 691909
இ-கடிதம் : cicf@sltnet.lk இணையத்தளம் : www.cicagribusinesses.com
(20342)
M&S Associates

## யாழ்.கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை

**2001இல் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான**

# பாராட்டு விழா

இடம்:
அழகரத்தினம் மண்டபம்
காலம்:
*19.01.2002 சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல்*

தலைவர்
**திரு.தேவசகாயம் ஜெயக்குமார்**
(தலைவர், பழைய மாணவர் சங்கம்)

முதன்மை விருந்தினர்
**திரு.க.மணிபல்லவராஜன் (நிஷாந்தன்)**
(தலைவர், நல்லூர் பிரதேச சபை)

அதிபர்
**திரு.C.ஞானேஸ்வரன்**
கொ.இ.ஆ.பாடசாலை

*பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

**சித்தியடைந்த மாணவர் விவரம்:**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | யோ.பிரவீணா | 164 | 02. | சு.மைவிழி | 163 |
| 03. | லோ.கோபிநாத் | 153 | 04. | இ.மாதங்கி | 151 |
| 05. | செ.கிரிஜா | 146 | 06. | வி.ஜீவனா | 146 |
| 07. | அ.சுபாங்கி | 145 | 08. | செ.நிருஜா | 145 |
| 09. | சு.சுபதர்சன் | 143 | 10. | பி.குருபரன் | 139 |
| 11. | பா.கஜானன் | 138 | 12. | கு.சுஜாதா | 138 |
| 13. | பா.கபிலன் | 137 | 14. | ஸ்ரீ.கிருஷா | 137 |
| 15. | க.கஜேந்தினி | 137 | 16. | வ.சுவேந்திரமுதலி | 136 |
| 17. | தி.மதுவந்தி | 135 | 18. | தி.கிருபன் | 133 |
| 19. | ர.நிறுத்தியா | 133 | 20. | ஹ.டயான் | 133 |
| 21. | ம.டர்ஸா | 132 | 22. | சி.லக்ஷாயினி | 132 |
| 23. | ம.சுவர்ணன் | 131 | 24. | ஐ.நிருபனா | 130 |
| 25. | லோ.ஸ்ரீநிகேதன் | 128 | 26. | ச.நிருபா | 128 |
| 27. | கு.சர்மினி | 127 | 28. | ஸ்ரீ.சுதர்சிகா | 127 |
| 29. | த.ரேனுசாந்த் | 127 | 30. | வி.துவாரகா | 127 |
| 31. | பொ.சஜீவிகா | 127 | 32. | சி.தயானி | 126 |
| 33. | தே.வீதுர்சன் | 126 | 34. | கு.நிவேதிகா | 124 |
| 35. | த.சிவதர்சன் | 124 | 36. | தே.ஆதித்தன் | 124 |
| 37. | அ.கௌரிகா | 124 | 38. | சி.தனுஜா | 123 |
| 39. | ச.சகானா | 122 | 40. | இ.றஜீவர்ணன் | 120 |
| 41. | க.யானுகா | 120 | 42. | நி.டிலக்ஷி | 120 |
| 43. | சி.ஆர்த்திகா | 118 | 44. | சொ.ஆரணியர் | 118 |
| 45. | எ.றிசானா | 118 | | | |

சித்தியடைந்த மாணவ மாணவிகளைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பாடசாலைச் சமூகம்.

(97292)

## பூப்புப்புனித நீராட்டுவிழா திகதி மாற்றம்

*அன்புடையீர்!*

நாளை (20.01.2002) ஞாயிற்றுக்கிழமையன்று மங்களகரமாக நடைபெறவிருந்த

எமது ஏக புத்திரி திருநிறைசெல்வி

**"சுகிர்தா"**

அவர்களின் பூப்புப்புனித நீராட்டு விழா வைபவம் தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் (26-01-2002) சனிக்கிழமை முற்பகல் நேரத்துக்கு மாற்றஞ்செய்யப்பட்டு நடைபெறவுள்ளது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கந்தையா வாத்தியார் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (97288)
- **திரு.திருமதி லோகநாதன் தம்பதியினர்.**

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு

**02.12.2001 இல் சிவபதப்பேறுற்ற இணுவில்**
**பிரபல ஆயுர்வேத வைத்தியரும்**
**எமது அன்புத் தந்தையாருமாகிய**

### சங்கரப்பிள்ளை வீரசித்தம்பி [பரியாரியார்]

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று (19.01.2002) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். ஆகவே இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.* (C/20368)
- **குடும்பத்தினர்.**


## புலமைப் பரிசில் - 2002

*பரீட்சை 17இல் அதிகூடிய புள்ளிகளை பெற்ற பரிசுக்குரியவர்கள்*

★ வ.[illegible] - 174
(யா/இந்து ஆ.பாடசாலை)
★ வி.தீபன்ராஜ் - 166
(ஆனைப்பந்தி மெ.மி.வித்.)
★ சு.சாரங்கன் - 145
(யா/இந்து ஆ.பாடசாலை)

*அடுத்த பரீட்சை - 20-01-02 (ஞாயிறு)*
காலை 8.30, 10.30 } பழைய நேரம்

தரம் 1 முதல் O/L வரை புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

**நாவலர்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (97303)

**ஸ்ரீ செல்வா சினிமா**
யாழ்.
10.00, 1.30 (புதிய நேரம்)
*அஜித் நடித்த*
**ரெட்**
பிற்பகல் 4.30 (புதிய நேரம்)
*பார்த்தீபன் நடித்த*
**அழகி**
புதிய வெளியீடுகள்.

**லஷ்சுமி** இணுவில்
மம்முட்டி, முரளி, ரம்பா, தேவயானி, அப்பாஸ
நடித்த
**ஆனந்தம்** (ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (ப.நே.) (97188)

**நாகம்ஸ்** சுன்னாகம்
மகத்தான பொங்கல் வெளியீடு
சரத்குமார், மீனா, பிரகாஷ்ராஜ்
நடித்த
**ரிஷி**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.) (97240)

**நிறஞ்சனாஸ்**
சங்கானை
பிரசாந்த், ஷாளினி, வடிவேலு
மற்றும் பலர் நடித்த
**பிரியாத வரம் வேண்டும்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C/20231)

**ராஜா** யாழ்ப்பாணம்
அஜித், மம்முட்டி, தபு, ஐஸ்வர்யா, மணிவண்ணன்
*மற்றும் பலர் நடித்த*
**கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00
விரைவில்
**பம்மல் K.சம்பந்தம்** (C/20292)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவமணி தேவராஜன்

**(காசாளர், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்)**

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த திருமதி சிவமணி தேவராஜன் நேற்று (18.01.2002) வெள்ளிக்கிழமை காலை அகாலமரணமானார்.

அன்னார் இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக்கொண்ட சங்கரப்பிள்ளை தேவராஜன் (ஓய்வுபெற்ற விலைமதிப்பீட்டாளர், விலைமதிப்பீட்டுத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் சுஜாதா (இராமநாதன் நுண்கலைப்பீட மாணவி, இறுதி வருடம்), விஜயதர்சினி (கலைப்பீட வெளிவாரிப் பட்டதாரி மாணவி, பட்டப்படிப்புகள் கல்லூரி; கணனி மாணவி, N.A.I.T.A.), தர்மேந்திரா (UNHCR, யாழ். இந்துக்கல்லூரி A/L 2001 கணித மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது கோப்பாய் இல்லத்தில் இன்று (19.01.2002) சனிக்கிழமை நடைபெற்று, பூதவுடல் நண்பகல் அளவில் கோப்பாய் மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பிராமனோடை,*
*கோப்பாய் வடக்கு,*
*கோப்பாய்.* (97290)
சங்கரப்பிள்ளை தேவராஜன் (கணவர்)

## ஐயம்பிள்ளை நடராசா

மண்கும்பானைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை நடராசா (மைதிலி, மதனா ஜுவல்லறி உரிமையாளர்) 17.01.2002 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தையா ஐயம்பிள்ளை - காலஞ்சென்ற இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் தங்கமலரின் அன்புக் கணவரும் சுந்தரலிங்கம், இராசலிங்கம் (நாரம்மலை), அன்னலிங்கம், யோகேஸ்வரி, ஞானேஸ்வரன் (கனடா) ஆகியோரின் சகோதரரும் மாலினி, மைதிலி, ஆனந்தன் (நியூ நகுலா நகை மாடம்), கஜந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் பரமசிவம் (மதனா ஜுவல்லறி), நகுலேஸ்வரன் (நியூ லலிதாஸ் ஜுவல்லறி, நகுலா நகை மாடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிலாஜினி, மதனகாந்த், பிரபகாந்த், சாருண்யா, கௌசனா, லலிதாஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (20.01.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சாட்டி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*199, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (97296)
ஆனந்தன், கஜந்தன் (மகன்மார்)

## அப்பையா இராஜசிங்கம்

தொண்டமனாறைச் சேர்ந்த அப்பையா இராஜசிங்கம் நேற்று (18.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கத்தின் அன்புக்கணவரும், தம்பித்துரை (கனடா), ஞானசேகரம் (சுவிஸ்), தியாகராசா (கனடா), வாமதேவன் (கனடா), தனசேகரம் (கனடா), நேசமலர், சிவானந்தி, திருமலர் (கனடா), புனிதவதி ஆகியோரின பாசமிகு தந்தையும், பஞ்சலிங்கம், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் விவேகானந்தன் (கனடா), யோகச்சந்திரன், சிவனேஸ்வரி (கனடா), யோகேஸ்வரி (சுவிஸ்), லலிதா (கனடா) ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2002) சனிக்கிழமை 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காட்டுப்புலம் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*உடுப்பிட்டி வீதி,*
*தொண்டமனாறு.* (97301)
இ.ஞானசேகரம் (மகன்)

## திருமதி சபாலிங்கம் வாலாம்பிகை

**(மண்டைதீவு)**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் நாவலர் வீதியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் (இலுப்பையடிச்சந்தி) கொண்ட சபாலிங்கம் வாலாம்பிகை நேற்று (18.01.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சபாலிங்கத்தின் அன்பு மனைவியும் சின்னையாவின் அன்புச் சகோதரியும் விஜயரத்தினம், விநாயகமூர்த்தி (வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர்), கேதீஸ்வரன், யதுகுலசிங்கம் (Norway), இராஜேஸ்வரி (Norway), யதுகுலமணி (Norway) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவஞானதேவி, இரத்தினாநந்ததேவி, சந்திரவதனா, நளாயினி (Norway), ரவீந்திரன் (Norway), சௌந்தரராஜன் (Norway) ஆகியோரின் அன்பு மாமியாரும் கவீந்திரன், விநோஜா, ஜனாகரன், யசிந்தன், அகீபன், பிரதீபன், பிரியகீர்த்தனா, கஜலக்ஷி, தனராகவி, சயந்தி, வித்தியா, விவேதன், அஜந்தன், சர்மிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயரத்தினம்,
விநாயகமூர்த்தி,
கேதீஸ்வரன்
(மகன்மார்).
(97295)

## மயில்வாகனம் சிதம்பரநாதன்

**(முதலியார் - ஓய்வுபெற்ற நீதிமன்ற மொழிபெயர்ப்பாளர்)**

வி.எம்.றோட், பருத்தித்துறையைச் சேர்ந்த மயில்வாகனம் சிதம்பரநாதன் நேற்று (18.01.2002) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - நல்லம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் மட்டுவில் வடக்கு காலஞ்சென்ற நாகமுத்து - சிதம்பரம் தம்பதியினரின் மருமகனும் ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி காமாட்சி சிதம்பரநாதனின் அன்புக்கணவரும் யாழ். போதனா வைத்தியசாலை டாக்டர் எம்.எஸ்.முகுந்தனின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2002) சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு இல. 30/9, அத்தியடி குறுக்கு வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கிறோம்.

தகவல்:
*இல30/9, அத்தியடி,*
*குறுக்குவீதி,*
*யாழ்ப்பாணம்.* (97293)
திருமதி காமாட்சி சிதம்பரநாதன் (மனைவி)
டாக்டர் எம்.எஸ்.முகுந்தன் (மகன்)

## திருமண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தைத்திங்கள் 19ஆம் நாள் இன்று (19-01-2002) சனிக்கிழமை பகல் 1.00 மணிமுதல் 4.00 மணிவரையுள்ள நல்வேளையில்

திரு.திருமதி செல்வராஜா தம்பதியினரின் செல்வப் புதல்வன் திருநிறைசெல்வன் **ரஞ்சித்** அவர்களுக்கும்

திரு.திருமதி இராசநாயகம் தம்பதியினரின் செல்வப்புதல்வி திருநிறைசெல்வி **அனிற்றா தர்ஷினி** அவர்களுக்கும்

எல்லாம்வல்ல தேவ அருள் துணைகொண்டு திருமணம் செய்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு Mildmay Day Centre, 69, Albert Road, Ilford Essex IG1 HPஇல் திருமண வைபவம் நடைபெறுகின்றது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

அந்த மங்கள வைபவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் அருள் ஆச்சிரமத்தில் இன்றைய தினம் திருப்பலிப் பூசை நிறைவேற விருப்பதால் அதில் பங்குபற்றி, மணமகன் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து, எம்மை மகிழ்வித்து திருமண வைபவ தினத்தைச் சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி செல்வராஜா,
37, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி இராசநாயகம்,
189, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு) (97283)

# கப்பல் பதிவுக்கு புதிய ஏற்பாடு

அடுத்தவாரம் சேவையை ஆரம்பிக்கவிருக்கும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலில் பயணம் செய்வதற்கான பயணச்சீட்டுக்களை பெறுவதற்கான நடைமுறை குறித்த விவரங்களை யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் 22 ஆம் 24 ஆம் திகதிகளில் இடம்பெறும் சேவைகளுக்கான பயணச்சீட்டுகள் ஏற்கனவே வழங்கப்பட்டுவிட்டன.

எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள சேவையுடன் புதிய ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருகின்றன.

நடைமுறை விவரம் வருமாறு:-

★செவ்வாய் சேவைக்கான பதிவு வேலைகள் பிரதி சனிக்கிழமைகளிலும் வியாழன் சேவைக்கான பதிவுகள் பிரதி திங்கட்கிழமைகளிலும் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் இடம்பெறும்.

★பயணத் தினங்களான செவ்வாய், வியாழன் ஆகிய நாள்களுக்கு முதல் நாள் பயணச் சீட்டுக்களை கப்பல் முகவர் அலுவலகத்தில் கொள்வனவு செய்ய வேண்டும்.

## விபத்தில் மரணம்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையின் காசாளரான சிவமணி தேவராஜன் (வயது 55) நேற்றுக் காலை தனது மகளுடன் மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்து பயணம் செய்தபோது வீதியில் இருந்த கிடங்கு ஒன்றில் மோட்டார் சைக்கிள் விழுந்த வேளை இவர் தூக்கிவீசப்பட்டு தலையில் படுகாயமடைந்து பின்னர் மரணமானார். (க-7-139)

## பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதே உண்மையாகும். நீதியான - நேர்மையான - விசாரணைகள் மூலம் உண்மைகள் அம்பலத்திற்கு வரும்போது எமது கட்சிக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்பது தெளிவாகும் - என்றுள்ளது. (க-3)

# நிரந்தர யுத்த நிறுத்தமும் பேச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தத் தேவையில்லை. மக்கள் நலனும், நாட்டு நலனும்தான் முக்கியம்.

கோடிக்கணக்கில் பணம் கொடுத்து ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்படுகின்றன. இது அரசாங்க திறைசேரிப் பணம் அல்ல. அரச வங்கிகளில் கடன் வாங்கிய பணம், இப்பொழுதே பெருந்தொகைப் பணம் வங்கிகளுக்குச் செலுத்தவேண்டியிருக்கிறது. தொடர்ந்து இப்படிக் கடன்பட்டுக் கொண்டிருக்க முடியாது.

- இப்படிப் பிரதமர் விளக்கினார்.

இலங்கையில் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கினால் உலக நாடுகளும் தாம் விதித்த தடையை நீக்க வேண்டி வரும் அதனால் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று சிலர் அஞ்சுகிறார்கள் அப்படி அஞ்சத் தேவையில்லை.

இந்தியா உட்பட உலகநாடுகள் சில புலிகள் இயக்கத்தை தமது சொந்தக் காரணங்களுக்காகவே தடை செய்துள்ளன. மற்றப்படி இலங்கை கேட்டுத்தான் அவை தடைவிதித்தன என்று சொல்வதற்கு இல்லை.

புலிகள் இயக்கத்தை இலங்கை தடை செய்வதற்கு முன்னர் இந்தியா (ராஜீவ்காந்தி கொலையோடு) புலிகளைத் தடைசெய்துவிட்டது.

எனவே, இலங்கையில் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் உலக நாடுகளும் அப்படிச் செய்ய வேண்டி வரும் என்று கொள்வதற்கு இல்லை. அவை அப்படிச் செய்யமாட்டா. அப்படிச் செய்யப்போவதில்லை என்று சில நாடுகள் தெரிவித்தும் இருக்கின்றன.

மனிதாபிமானப் பணிகளில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. ஏனெனில் இந்தப் பணிகள் மூலம் மக்களின் தேவைகளை நிறைவுசெய்ய முடிகிறது.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிக்கும் மற்றும் பகுதிகளுக்கும் மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் தாராளமாக அனுப்பப்படுகின்றன. போக்குவரத்தும் இலகுவாக்கப்பட்டு வருகிறது. மீன்பிடித் தடைகளும் தளர்த்தப்பட்டு வருகின்றன.

சோதனைச் சாவடிகள் பல நீக்கப்பட்டுள்ளன. சுற்றிவளைப்புகளும் பெருமளவில் குறைந்து விட்டன. இந்த வகைகளில் மக்களின் பல தொல்லைகளும் கஷ்டங்களும் நீக்கப்பட்டுள்ளன.

இந்த விதமான மனிதாபிமானப் பணிகள் பேச்சுகளுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தும், பேச்சுகளுக்கு உறுதியான அடிப்படையாகவும் அமையும்.

முன்னர் நடந்த பேச்சுக்கள் எல்லாம் குழம்புவதற்கு முக்கிய காரணமாக இருந்தது இந்த மனிதாபிமானப் பணிகள் சரிவர நிறைவேற்றப்படாமைதான்.

அதனாலேயே நாம் மனிதாபிமானப் பணிகளில் அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

நடைமுறையில் ஆங்காங்கே சில சிக்கல்கள் ஏற்படலாம். உடனே அவற்றைக் கவனித்து நிலைமையைச் சீராக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு இடைக்கால நிர்வாக அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படும். நிரந்தர இணைப்புக் குறித்து முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. அது குறித்து ஆலோசிக்கப்படவும் இல்லை - என்றார். (உ)


நுண்கலைத்துறையும் கலைவட்டமும் வழங்கும்



முதுசம்

நிகழ்ச்சித்தொடர் – 5

சத்தியவான் சாவித்திரி

சத்தியவானாக தைரியநாதன்,
சாவித்திரியாக செல்வரத்தினம்,
இயமனாக சின்னமணி,
சுமாலியாக சரவணமுத்து,
நாரதராக பாலசிங்கம்
தோன்றும்

ஸ்பெஷல் நாடகம்

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்
19.01.2002 இன்று மாலை 3.30



அன்பளிப்பு:

பாரதி

இசை வெள்ளத்தின் சாம்ராச்சியம்

☆ ஓடியோ CDகளில் இருந்து CDக்கள், கசற்றுகள் என்பன வற்றில் தரமான முறையிலும், நியாயமான விலையிலும் ஒலிப்பதிவு செய்திடவும் -

☆ V.C.D களில் இருந்து ஒலி ஒளிப்பதிவு பதிவு செய்திடவும் - வீடியோ CDக்கள், வீடியோ கசற்றுகள் என்பனவற்றை குறைந்த விலையில் வாடகைக்குப் பெற்றிடவும் - நீங்கள் நாடவேண்டிய இடம்:

பாரதி வீடியோ & ஓடியோ

றெக்கோடிங் சென்ரர்

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

☆சகல விதமான பாடசாலை உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள் என்பனவற்றை மலிவாகப் பெற்றிடவும் -

☆போட்டோ பிரதி, லெமினேற்றிங் (கவரிடுதல்) என்பனவற்றை தரமான முறையில் செய்திடவும் -

☆அன்பளிப்புப் பொருள்கள், அழகுசாதனப் பொருள்கள், என்பனவற்றை மலிவாகப் பெற்றுக்கொள்ள இன்றே நீங்கள் நாடவேண்டிய இடம்:

பாரதி ஸ்ரேசனரீஸ் & பான்சி

(C/20377) பலாலி வீதி, கோண்டாவில் சந்தி.



ஆரம்பம் A/L 2004

எண்ணற்ற மாணவர்களின் எதிர்பார்ப்பத்கு இணங்க முதன் முதலாக நல்லூரில்

A/L தமிழ்: திரு.குழந்தை

இந்துநாகரிகம்:
திரு.ஜெயக்குமார்
அளவையியல்:
திரு.சுரேஸ்
ஆங்கிலம்:
திரு.சத்தியபாலன்

21.01.2002 மாலை 5.00 (N.T.)

N.E.T

சட்டநாதர் கோயில் முன்புறம், நல்லூர்

*வர்த்தக பிரிவுக்கான வகுப்புகளும் ஆரம்பமாகின்றன.

(C/20365)



O/L, Gr.10, Gr.9
மாணவர்களுக்கு
தைப்பொங்கல் பரிசு

இலங்கையிலேயே அதிவிளக்கத்துடனும் மிகவும் நுட்பமாகவும் "விஞ்ஞானம்" கற்பித்துக் கொண்டிருக்கின்ற ஒரேயொரு ஆசிரியர்

GRAPHS குமரன்

யாழ்.நகரில் பிரிவு - 8
விரைவில் ஆரம்பம் பெயர்களைப் பதிவு செய்யவும்.

நியூ பிறைற்

(C/20357) யா/மாட்டீன் வீதி



எமது புதிய வீடியோ CD
வெளியீடு
☆ ரெட்
☆ ஐயப்பா நீதான்
மெய்யப்பா
பிரதிகள் உடன் பெறலாம்
அல்டி
எலக்ரோனிக்ஸ்
(C/20374) யாழ்ப்பாணம்.



எமது புதிய வீடியோ
CD வெளியீடு
ரெட்
பிரதிகள் உடன் பெறலாம்
வீடியோ விமல்
(C/20376) யாழ்ப்பாணம்.



கணக்கீடு

PERSONAL CLASS

A.கலைச்செல்வன் [B.com.Acc(sp)]

இரு இடங்களில்

| | |
|---|---|
| இல.227, நாவலர் றோட், யாழ்.நகர். A/L 2002 வினா விடை 2003, 2004 புதிய பிரிவு ஆரம்பம் இன்று பி.ப. 4.00 | ஆறுமுகம் ஒழுங்கை, கல்வியங்காடு. A/L 2002 வினா விடை 2003, 2004 புதிய பிரிவு ஆரம்பம் இன்று பி.ப. 5.00 |

நேரசூசிகள் வகுப்புக்களில் வைத்து வழங்கப்படும்

அனைவருக்கும் பொருத்தமான

இன்று ஆரம்பம்



IIS

வாழ்த்துகின்றோம்

இன்று IBMS நிறுவனத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தையிட்டு பெருமகிழ்ச்சி அடையும் IIS சமூகத்தினராகிய நாம், இன் நன்னாளில் IBMSஇன் இயக்குநர், நிர்வாகத்தினர், விரிவுரையாளர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இயக்குநர், பயிற்சி இயக்குநர்,
விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
மாணவர்கள்,
IIS யாழ்ப்பாணம்.

(C/20372)



உ

திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தைத்திங்கள் 6ஆம் நாள் (19.01.2002) சனிக்கிழமை காலை 8.17 மணி முதல் 9.51 மணிவரையுள்ள கும்பலக்கினம் கூடியுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

மூர்த்தி வீடியோ அன் எலக்ரோனிக்ஸ்

என்னும் நிறுவனத்தைத் திறக்க இறைவன் திருவருள் பாலித்திருப்பதால், அத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் குடும்பசகிதம் வருகைதந்து நிகழ்வைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை அன்புடன் விரும்பும்

யாழ். வீதி, மானிப்பாய். (97291) து.கமலநாதன், உரிமையாளர்.



மங்களகரமான புதுக்கடைத் திறப்பு விழா

நிகழும் விஷு வருடம் இன்று (19.01.2002) தை 6 சனிக்கிழமை காலை 8.15 தொடக்கம் 9.50 மணி வரையுள்ள கும்பலக்கின சுபவேளையில்,

சிறி அம்பாள் பார்மஸி அன்ட் குறோசறி

பிரதான வீதி, மானிப்பாய்

எனும் நிறுவனத்தை ஆரம்பிக்க உள்ளதால் அத்தருணம் குடும்ப சகிதம் வருகை தருமாறு அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

SRI AMBAL PHARMACY AND GROCERY

MAIN STREET, MANIPAY.
T.P.070-212305

தங்கள் நல்வரவை நாடும்:
(சாவகச்சேரி அம்பாள் பார்மஸி அன்ட் குறோசறி)
உரிமையாளரின் மகன் - கண்ணன். (97222)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.